தென்மொழி

இருள் உலகம்.

1. பொறியிலார் புல்லுரைக் கென்செவி யிளைத்தேன்;
      பொய்யர்முன் மெய்யுரைத் திழிந்தேன்;
   குறியிலார்க் கொருவழி கூறிநாத் தடிந்தேன்:
      கொடியர்முன் பணிந்துளம் நொடிந்தேன்;
   நெறியிலார் அழிவதை எண்ணிநெஞ் சொடிந்தேன்;
      நீர்மையர் வறுமைகண் டழுதேன்;
   அறிவிலார் மேன்மேல் உயர்வதை அறிந்தேன்!
      அழலென உளங்கொதித் தேனே!

2. உயர்விலார் தொடர்பை உண்டுளங் கசந்தேன்!
      உழைப்பவர் துயர்க்குயிர் துடித்தேன்.
   மயர்விலார் சிறப்பற மடிவதைக் கண்டேன்!
      மாண்பிலார் பிழைக்கநெஞ் செரிந்தேன்.
   அயர்விலார் இழிநிலை அடைவதை நினைந்தேன்!
      அன்பிலார் இன்மொழி இகழ்ந்தேன்.
   வெயர்விலார் நிழல்படுத் துறங்கநெஞ் சழன்றேன்!
      வெறுவெளி துயில்வர்கண் டேனே!

3. பெட்பிலா மகளிரைப் பார்த்துளம் வெயர்த்தேன்!
      பெண்டிர்தந் துயர்க்குளம் நைந்தேன்.
   நட்பிலா நெஞ்சினர் நட்பினுக் கொடிந்தேன்!
      நண்பருக் கலைந்துகால் கடுத்தேன்!
   உட்புகா நெஞ்சினர் உறவுகண் டுமிழ்ந்தேன்!
      ஊர்விழுங் குவர்க்குளம் உடைந்தேன்!
   கட்புகா தீவினைக் கயவருக் கொளிந்தேன்!
      காதலில் இழிவுகண் டேனே!

[தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க]

வடி 13.
லை : 5-6.
விலை : உரு : 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

தமிழ்க் குழந்தைக்குத் தாலாட்டு.

புதுவை. ப. அடியார்க்கருளி.

[தமிழக்குடித் தாயொருத்தி தன் பெண் குழவியை ஏணையி லிட்டு ஆட்டிக்கொண்டே ஏக்கப் பெருமூச்சொடு பாடிய தனித் தமிழ்த் தாலாட்டுப் பாடல்.]

ஆராரோ ஆரிரரோ ஆசிரரோ ஆராரோ !
ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ !

செந்தமிழே ! பைங்கிளியே ! செஞ்சரமே ! பூக்கொடியே !
சொந்தமென என்னுயிரில் தோன்றியவென் குலக்கொடியே !

இன்பமெனுஞ் சொல்லிழிய என்வயிற்றில் நீமுளைத்துத்
துன்பமெனுஞ் சொல்லழிக்கத் தோன்றியவென் தீங்கொடியே!

உன்னம்மை நானிசைக்கும் உயர்தமிழ்த் தாலாட்டு
மென்னம்மைப் பாட்டினை நீ மெதுவாகக் கேட்டுறங்கு !

தண்ணொளியாற் வெண்பளிங்கில் தாவுசுரு வண்டிரண்டைக்
கண்ணெனவே பெற்றணையே ! காந்தவொளி உற்றணையே !

மின்னொளியைத் தோற்கடிக்கும் மேனியொளி பெற்றவளே !
உன்விழியில் இமைபோர்த்தி உறங்கடியென் செங்கொடியே!

புருவமெனும் பூவில்லில் பூவிழியாம் அம்பெடுத்தே
அருகுவரும் எவ்வுயிரும் அகமகிழ எய்பவளே'

பூக்குழம்பில் வார்த்தெடுத்த பூவிதழில் சொள்ளொழுக
நோக்கியெனைத் தூக்குநளே ! தேக்கரும்பே கண்ணுறங்கு !

(அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.)

(முதல் பக்கப் பாடல் தொடர்ச்சி)

4. பொருட்பெற வாயிரம் பொய்ப்பரைக் கண்டேன் !
பொருள்மக ளிர்க்குளம் புகைந்தேன் !
இருட்புகு கோயிலின் இழிசெயற் குலைந்தேன்,
ஏதுமி லார்க்குநெஞ் சவிழ்ந்தேன்.
அருட்புகு நெஞ்சரென் ருர்ப்பரை வியந்தேன்.
அழுக்கறு வார்க்குடல் பொடிந்தேன்.
மருட்புகு கல்வியர் மயல்சீர்க் குயிர்த்தேன்,
மானமி லார்க்கஞ் சினனே !

5. பணிவினர் தம்மிடைப் பகைவரைப் பார்த்தேன் !
பசியிலார் ஊண்பெறக் கொதித்தேன் !
பிணியினர்க் கிரங்கிலாப் பித்தர்கண் டடுத்தேன் !
பிணியிலார் மருந்துணச் சினந்தேன் !
துணிவினர் நெஞ்சினுட் டுணுக்குகண் டிழித்தேன் !
துயரிலாக் கிடுசூல்கண் டகன்றேன்
வணிகனர் கைவாய் வரும்படிக் கயர்ந்தேன்.
வல்லிருள் உலகுகண் டேனே !

(சூன், 1961-இல் சனநாயகம் இதழில் வெளிவந்தது.)

தென்மொழி

இலக்கிய இதழ்

சுவடி : 13 ஓலை : 5-6

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர் நின்றே!

ஆடவை-கடகம்-தி. பி. ௨௦௦௭-சூன்-சூலை-1976.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

5-2-76 முதல்

ஆசிரியர் எழுத
இயலாத நிலையில் உள்ளார்.—அமைச்சர்.

மறைமலையடிகள் மாண்பு.

தென்னாடு வந்த வேதப் பிராமணரையும் அவர் வழியினரையும் நிலத்தேவரென்றே தமிழர் நீண்டகாலம் நம்பியதனாலும், அவ்வாரியரும் தமிழ்வழி நூலியற்றித் தமிழ்ப் பற்றினர்போல் நடித்துத் தமிழர்க்குப் புலனாகாவாறு சன்னஞ் சன்னமாய் ஆரியக் கருத்துகளை நுண்ணிதிற் புகுத்தி வந்ததினாலும், திருவள்ளுவர் காலம் வரை ஆரியத் தீங்கு தமிழர் கண்ணுக்குத் தெரியாது மறைந்திருந்தது.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்". (972)

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்". (300)

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்". (134)

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்". (560)

என்று திருவள்ளுவரே முதன் முதல் ஆரியத்தைச் சமயத் துறையிலும் குமுகாயத் துறையிலும் கண்டித்தார்.

அதன்பின், கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் சுவாமிநாத தேசிகன் போல் தன் வடமொழியாசிரியனால் ஏவப்பட்டுத் தமிழைப் பழித்த குயக்கோடனை, நக்கீரர் சாவப்பாடினார் என்பது,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானை"

என்னும் வெண்பாப் பகுதி உணர்த்தும்.

திருவிளையாடற் புராணத்திலுள்ள,

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

இக்கட்டுரை மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் *அவர்களின் 'வடமொழி வரலாறு'* என்ற நூலில் உள்ள "தென்மொழி வட மொழி வரலாறு!" *என்னுந் தலைப்பின்கீழ் வெளிவந்தது.*

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட துய்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்னும் பரஞ்சோதி முனிவர் பாட்டுக்கள் (திருநாட். 57-8), 16-ஆம் நூற்றுண்டிலிருந்த தென்மொழி வடமொழிப் போராட்டத்தை ஒருவாறு தெரிவிக்கின்றன.

17-ஆம் நூற்றுண்டிற் பாடப் பெற்ற,

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும் வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்"

என்னும் சீகாளத்திப் புராணத் தமிழ்வாழ்த்துச் செய்யுளில், "உறழ்தரு" என்னுஞ் சொல், "ஒத்திருக்கின்ற" என்னும் பொருளினும் 'மாறுபடுகின்ற' என்னும் பொருளே சிறந்து படுகின்றது.

18-ஆம் நூற்றுண்டிற் சிவஞான முனிவர் பாடிய,

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி லிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிபடுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினர் என்றாலிவ்
விருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ,"

என்னும் செய்யுட்கள் (காஞ்சிப்பு, தழுவக், 248-9), மாறுபடும் இரு சாராரையும் ஒப்புரவாக்கும் நடுவர் கூற்றுப்போல் ஒலிப்பதால், தென்மொழி வடமொழிப் போராட்டத்தை மறைமுகமாகத் தெரிவிப்பனவே.

19-ஆம் நூற்றுண்டில், சுந்தரம் பிள்ளை தம் மனோன்மணீயத் தமிழ்த் தெய்வ வணக்கச் செய்யுளில்,

(தரவு—2.)

"ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே,"

(தாழிசை—3.)

"சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ யனுதியென மொழிகுவதும் வியப்பாமே."

(தாழிசை—10.)

"பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே."

(தாழிசை—11.)

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி."

(தாழிசை—12.)

"மனங்கரைந்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ."

என்று வெளிப்படையாய் இப்போராட்டத்தைக் காட்டினர்.

இனி,

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

என்னும் பாடினர். பெயர் தெரியாத தண்டியலங்கார வுரைப் பழைய வெண்பா, தமிழே உலகமுத லியக்கியச் செம்மொழி யென்று கூறி, அது ஆரியத்திற்கு மூலமென்பதை ஏரணமுறையி லுணர்த்துகின்றது.

தென்மொழி வடமொழிப் போராட்டம் பற்றிய உரைநடைப் பகுதிகள் பலவாகவும் விரிவாகவுமிருத்தலின், அவை இங்குக் கூறப்பட்டில.

1916-ஆம் ஆண்டு, மறைமலையடிகளும் அவர்களின் அருமை மூதன் மகளாரா நீலாம்பிகை யம்மையாரும் வடசொல் லுள்ளிட்ட

உள்ள அழகு.

(15-12-57 –இல் வானம்பாடி இதழில் வெளிவந்தது.)

மாங்குயில் இசைகேட் டென்செவி மகிழும்;
மங்கை உன் பேச்செனக் கேனோ?
தூங்கொளி குளிர்நில வென்னுளம் மலர்த்தும்;
தோகை உன் முகமெனக் கேனோ?

பசுந்தமிழ்ப் பாடலில் என்வாய் இனிக்கும்;
பாவை உன் இதழ்எனக் கேனோ?
விசும்பிடை கருமுகில் எழில்நிறங் காட்டும்;
விளங்கிழை உன் குழல் எனக் கேனோ?

தாமரை முகைமலர்ந் தெனக்குவப் பூட்டும்;
தழல் எனும் இருவிழி ஏனோ?
பூமண மேவிய தென்றல்வந் தணைக்கும்;
பூவை உன் உடல் எனக் கேனோ?

பெருங்கிளை தழுவிய கொடி மகிழ் வூட்டும்;
பேதை நின் உரு வெனக் கேனோ?
மருங்கொடிந் தொளிர் வான் வில்உவப் பூட்டும்;
மடந்தை உன் இடை எனக் கேனோ?

தோன்றும் உன் அழகெலாம் வேண்டுதற் குன்னைத்
துணையெனக் கொள்ளுதற் கில்லை!
ஊன்றிடும் மகிழ்விற் குள்ளத்தின் அழகே,
உன்னுடன் யான்பெறல் வேண்டும்!

வேற்றுச் சொற்களைக் களைந்து நல்லுரமிட்டு நன்னீர் பாய்ச்சிக் கண்ணுங் கருததுமாய்ப் பேணி வளர்க்கத் தொடங்கியதினின்று, தமிழ்ப பயிர் தழைத்தோங்கி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது. அதே சமயத்தில், அகப் பகையும புறப்பகையுமான பல்வகைத் தமிழ்ப்பகைவரும், வேற்றுச் சொற்களை மீண்டும மீண்டும ஊடுவிதைத்துக் கொண்டும் விலங்கு பறவைகளை ஏவிக்கொண்டும வரத்தான் செய்கின்றனர். ஆயினும், அவர் படுதோல்வி யடைந்து அடியோடு அழிந்தொழிந்து போவது அண்ணணித்தே.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே, சூரியநாராயண சாத்திரியார் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞன் என்று மாற்றித் தமிழர்க்குத் தனித் தமிழுணர்ச்சி யூட்டினாரேனும், அது செயலளவில் தொடராது உணர்ச்சி யளவிலேயே நின்றுவிட்டது. அதனால், தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரை நடையுஞ் செய்யுளுமாகிய இரு வடிவிலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி, முதலிருகழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்தவர், மாநிலத்தில் மக்களுள்ளவரை மறையாப் புகழ்பெற்ற **மறைமலையடிகளே!**

மதங்காப்பார்!

(15-11-57-இல் வானம்பாடி இதழில் வெளிவந்தது.)

மாடெனக் கொழுத்து, மரமெனக் குந்தி
மக்களும் மனைவியும் இன்றி—நல்ல
மாண்புயர் வொழுங்கதும் குன்றி—மயிர்க்
காடெனச் சடைகள் களிறெனத் தொந்தி
கனிபால் நெய்வகை யோடு—நல்ல
கற்றமைந் துலவுமோர் வீடு—தனில்
வீடெனக் கூறி, விரிசடைக் கடவுள்
வித்தகம் நாள்தொறும் பேசி—நல்ல
வாழ்விலா மக்களை ஏசி—வெறுங்
கூடென உடலைக் கூறுவர் தமக்குக்
குருக்கள் எனும்பெயர் சூட்டி—பலர்
குவிந்தனர் மதந்தனைக் காட்டி!

கோடையில், மழையில், பனியினில் மூழ்கி,
கொடுங்கடல் புகுந்துயிர் வாடி—தங்
குடலிட உணவதைத் தேடி—பலர்
வாடையில், ஒருசிலர் கடவுளை, மதத்தை
வளர்த்ததில் தங்குடல் கழுவி—பல
வகையினில் இன்பத்தைத் தழுவி—பட்
டாடையில் போர்த்த அணியுடல் மறைத்தே
அறுசுவை உணவினை உண்டு—பல
அணங்குகள் தம்நலம் கண்டு—மத
ஓடையில் நீந்தி உலகினில் வாழ்வார்
உழைத்திடும் மக்களை ஏய்ப்பார்—அவர்
உளத்தினை நாள்தொறும் மாய்ப்பார்!

உழைப்போர்க் கெல்லாம் ஒவ்வொரு மடமும்,
ஒவ்வொரு பீடமும் தந்து—பல
உணவதும், உடைகளும் தந்து—அவர்
அழைப்பார் ஆகில் அனைவரும் அவர்போல்
ஆயிரம் பூக்களைக் கொய்து—நாளு
மறுமுறை பூசைகள் செய்து—நன்கு
பிழைப்பா ரன்றோ? பெரும்பே ரின்பப்
பிறவுல கெய்துவ ரன்றோ?—இப்
பிறப்பினை அறுப்பா ரன்றோ?—இதை
உழைப்போ ரெல்லாம் உணருவ ராகில்
உயிர்பெறுமா மதம் இங்கு?—இதற்
குழைப்பது அவரவர் பங்கு!

உள்ளக் கூத்து!

(1-3-59-இல் வானம்பாடியில் வெளிவந்தது.)

மெல்லியந் தென்றல்வந் தோட்டுகின்ற மென்முகிலின்
மேலேறிக் குந்தி, நீலம்
மேவுமொளி வானத்து வெளியெல்லாம் சுற்றியும்
மேலைக் கடல் குளித்தும்,
துல்லியம் பூவிதழ்க ளுட்புறத் தூறுகின்ற
தேனினைச் சுவைக்க வெண்ணித்
தும்பிக்குத் தம்பியாய் ஓலைச் சிறகாட்டித்
தொலைவெலாஞ் சென்று மகிழ்ந்தும்,
கொல்லியஞ் சாரலில் பலவின் கனியருந்திக்
குற்றால நீர ருந்தி,
குமரி மணலி லுளம் மகிழமகிழ உடல்
குப்புற வீழ்ந்து புரண்டும்,
அல்லியங் காதல னுமழகு முழுநிலவை
அண்டி, பல பாடல் பெற்றும்,
அன்றன்றை என்னுள்ளம் ஆட்டி நடத்துவிக்கும்
அருங் கூத்தை என்ன சொல்வேன்?

நுரை மடக்கியொரு பாயாய்ச் சுருட்டுகின்ற
நீலக் கடலின் அலையின்,
நடுவிற் புகுந்து சுழன் றாடி மகிழ்ந்துபல
நாட்டியங் காட்டி மகிழ்ந்தும்,
பாரை ஒளிக்கடலாய்ப் பண்ணி யுருவாக்கும்
பரிதியின் சூட்டிற் காய்ந்தும்,
பனிமைக் குளிர்கடலி னடியில் மூழ்கிமுத்துப்
பரவினைக் கண்டு மகிழ்ந்தும்.
ஏரை வளைத்துடலை எருதாக்கி உயிர்புரக்கும்,
ஏழையோ டேவந்து பேசி,
இன்னாத மக்களின் நெஞ்சிற் குடியேறி
இகழ்ச்சிபல கூறி இழித்தும்,
ஊரைத் தமதாக்கி உழைப்பைப் பிறர்க்காக்கும்
உலுத்தரை இடித் திடித்தும்,

ஓயாம லென்னுளம் என்றென்றும் ஆட்டுவிக்கும்
உயர்கூத்தை என்ன சொல்வேன் ?

தூங்குஞ் சிறுகுஞ்சைத் தாவிப் பறந்துவந்து.
துளிவாயில் உணவை ஊட்டித்
தொலைவிற் காத்திருக்கும் சிட்டோ டுடலொட்டித்
துய்க்குநல் லின்பங் கண்டும்,
பூங்கோ துணவுண்டு, பூத்தமிழின் பாட்டிசைத்துப்
பழகுகருங் குயிலி னோடு,
பழகிப் பெருமையல் கொண்டபின், மயிலுக்குப்
பாடியதன் ஆடல் கண்டும்.
ஏங்கிக் கணவரைநின் றெதிர்நோக்கு மங்கையர்க்
கினியசொற் கூறித் தேற்ற,
எடுத்துக் கொடுத்திட்ட இன்கனிகள் பரிசேற்றே
என்வரவு காத்தி ருக்கும்,
தூங்கா மனையாட்டி உளமகிழ அருகமர்ந்து,
தொலைசென்ற பாடல் பாடித்,
தொல்லையும், ஏழ்மையும் மறக்கவெமை ஆட்டுவிக்கும்
தனிக்கூத்தை என்ன சொல்வேன் ?

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம் :	12 உருபா	24 உருபா	24 உருபா.
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

உலகியல் நூறு.

— பெருஞ்சித்திரன் —

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

5. வாழ்வியல்.

1. உழவு நிலை.

உழவுக் கிரண்டு தொழில்குடிக்கொவ் வொன்றால்
இழவுக் கிடமுலகில் இல்லை—முழவுக்குக்
காத்துழுது மின்னுக்குக் காழிட்டால் தாமுண்டு
மீத்தயலுக் கீயலாம் மேல்! 21.

பொழிப்பு : உலகில் நீரும் சேறும். தூருந் துவரும், பாழும் பரலும், காடும் கரம்பும் தவிர்த்த நன்னிலத்தில் உழவுக்கென இரண்டு கூறும் தொழிலுக்கும் குடியிருப்புக்குமென ஒவ்வொரு கூறும் கொண்டு பயன் கண்டால், உலகில் துயரத்திற்கு இடமில்லை யாகும். இடிமிகுந்த காலத்திற்குக் காத்திருந்து உழுது, மின்னும் பருவத்தில் விதைத்தால், உழைப்பவர் தாமும் வயிறார உண்டு, மற்றவர்க்கும் ஈயும்படி விளைவு மிகுந்து நிற்கும்.

குறிப்பு : இடிமிகுந்த காலம் : பின் முதுவேனில்.
மின்னும் பருவம் : பின் முதுவேனிலுக்கும் முன் காருக்கும் உள்ள இடைப் பருவம்.

கோடையில் உழவேண்டும் என்றது உழுத மண் நன்றாகக் காய்தல் வேண்டும் எனற்காம் அறிக.

பரல் : பாறைக் கல் நிறைந்த நிலம்.

5. ART OF LIVING.

1. ON AGRICULTURE.

Two parts for farms, for work, housing
One each will wipe world's suffering.
Wait for thunder to till. and sow
When It's lightning, surplus to show. 21.

Avoiding the moor, the shrubby, arid, stony and sandy, if, out of the fertile soil in the world, two parts for farms

and one each for industry and habitation can be set apart, there will be no misery for mankind. To wait for the season of thunder for ploughing and for that of lightning for sowing will ensure a good feed for labour and a good surplus for others.

Note: Thunder is more during the late summer and lightning is more between this and the early rainy season. Ploughing during summer will ensure drying up of the soil well.

௨. தொழில் நிலை.

செய்தொழில் இன்றிச் சிறப்பில்லை ; தேவையோ
டெய்தொழில் காலம் இடனறிந்து—மெய்வளையக்
கைகருவி போற்றிக் கணக்கறிந்தால் பூதங்கள்
ஐகருவிக் குள்ளாடும் ஆம்! 22.

பொழிப்பு : தாமே செய்கின்ற தொழில் முறைகளின்றிப் பிற வேறு தொழில் முறைகளால் சிறப்பு எய்துவதில்லை ; நம தேவைகளையும் நாம் எய்த வேண்டிய தொழிலையும், அது செய்யப் பெற வேண்டிய காலத்தையும் இடத்தையும் அறிந்து, உடல உழைபபு மிகுமபடி, கைகளாலுப, கருவிகளாலும் ஊககமொடு செய கின்ற தொழலின் விளைவுகளையும் இழபபுகளையும கணக்கிட்டுச் செய்தால். ஐயபூத வியககங்களும நம ஐபபொறிகளின் ஆறறலுக் குள அடங்கும எனக.

2. ON EMPLOYMENT.

To be without work is not right ;
Know needs the work, place and time bright.
Work hard with hands and tools, with eye
On waste; organs make elements ply. 22.

Right eminence results from work done personally by one and not from work done through others. Know the needs and the work that will meet this. Also know the right place and time for doing it. Then work hard with hands and tools and in right earnest with an eye on waste. Then our organs will control the elements five.

௩. புன்மை நிலை.

இன்மையே புன்மைக் கிடங்கொடுக்கும் மற்றதனை
வன்மையாற் கல்லல் வழுவிளைக்கும்—மென்மையாய்
உள்ளம் உழுதுணர்வு வித்தி உழைப்பறுத்தால்
கள்ளம் கிளைமடிக்கும் காண்! 23.

பொழிப்பு: தம் துய்ப்புக்கு இல்லாத வெறுமை நிலைகளே ஒருவற்கு மனத்தானும் அறிவானும் வினையானும் தாழ்ந்த புல்லிய நிலைகளுக்கு இடந்தருவன ஆகும். அவ்வாறு நேர்வனவற்றை வேறு வலிய புற முயற்சிகளால் தடுத்து நிறுத்துதலோ அகற்றுதலோ குற்றங்களை விளைவித்து விடும். அந்நிலைகளுக்குட்பட்ட ஒருவரை அன்பும் பரிவும் ஆகிய மென்மை உணர்வுகளால் நெருங்கி, ஈடுபாட்டான் அவரின் உள்ளத்தைப் பதப்படுத்தி, அறிவை ஊன்றி, அவரின் வெறுமை நிலைக்கான அடிமை, மிடிமை, அறியாமை முதலியவற்றைப் போக்கி, அவருடற்கு உழைப்புத் தந்து, பயன் பெறுமாறு செய்வது, கள்ளம் முதலிய குற்றங்களைத் தன் கிளைகளுடன் மடியச் செய்து விடுமென்றும் கண்டு கொள்க.

3. ON DEGRADATION.

Wants will lead one to states so low;
To cull out these by force faults'll grow.
Till heart with truth and feelings sow
And see lewdness with branches go 23.

Felt want of things for one to enjoy makes one go too low in thought. word and deed. Any attempt to avoid or remove these by external forces will lead to faults. Approach, those so circumscribed with such tender feelings, as love and sympathy and intelligently move to make them understand that slavish mentality, sloth, ignorance and the like are the root causes of their wants. Make them give up these, work hard and look for fruits thereof. That done, know all hese faults will wither and die with all their branches.

4. துன்ப நிலை.

துன்பமெனும் ஆசிரியன் துன்னப் பயிற்றுவிக்கும்
இன்பமெனுங் கல்விக் கிறப்பில்லை—இன்புணர்வால்
உள்ளம் விளங்கும் உலகம் விளங்காதே
வெள்ளத்துப் பின்பார் விளைவு! 24,

பொழிப்பு: துன்பம் என்னும் இயற்கை ஆசிரியன் நெருக்க முறப் பயிற்றுவிக்கின்ற இன்பம் என்னும் கல்வியறிவுக்கு என்றும் அழிதல் இல்லை. ஒருவர்க்கு வந்து சேரும் இன்ப நிலைகளால் உள்ளத்தின் அன்பு, இரக்கம் முதலிய உணர்வு வெளிப்பாட்டு நிலைகள் மட்டுமே விளங்குவதாகும். மக்களமைப்பு. வாழ்வியல் முறைகள், உலகப் பெருக்கம் முதலிய உலக நிலைகள் விளங்காமற் போகும். ஆற்று நீர் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து இடர் தந்து, பின் வடிந்த நிலையில், அண்டை அயலில் படிந்து விளங்கும் வண்டலால் உறுகின்ற பயிர் விளைச்சலைக்கண்டு உண்மை தெளிக.

4. ON MISERY.

Sorrow teaches intense and well;
Cultural joy shall know no knell
Gay feelings brighten heart, not world:
Rich growth after the floods behold. 24.

Misery is the natural teacher to give us intensive training. The resultant joy of cultural knowledge knows no death. Only the joyous state of feelings of the heart are revealed by expression of kindness, sympthy and the like. This may not be so clearly seen in organised society, modes of human living, propagation and such like worldly manifestations. We see the rich, green vegetation in the alluvial soil only when the floods have subsided and not when the river is in space. From this learn the truth us.

5. இன்ப நிலை.

அழலின்ப மென்னின் நிழற்றுன்பம் ஆங்கே
நிழலின்ப மென்னின் வெயிலாம்—குழலின்பங்
கற்செவிடு தானறிமோ காட்சி குருடறிமோ
தற்சார்பாம் இன்பம் தனக்கு ! 25.

பொழிப்பு : வெப்பம் இன்பத்தைத் தரும். சில நிலைகளில் நிழல் துன்பத்தையே தரும். அவ்வாறே நிழலால் இன்புறும் சில நிலைகளில் வெயிலால் துன்பமே விளையும். நுகர்வு நிலை சிறிது தானுமன்றிக் கல்போலும் பிறவிச் செவிடு, குழலின் இன்பத்தை அறிய முடியுமோ? அது போலும் பிறவிக் குருடுதான் காட்சி இன்பத்தை உணர வியலுமோ ? இயலாவாம் ! எனவே, இவ்வுலக வுயிர் ஒவ்வொன்றுக்கும், இன்பம் என்பது அஃததற்குப் பொருந்திய தற்சார்பு நிலைகளே என்று அறிக.

5. ON JOY.

Joy of fire, sun; miseny's from shade ;
Get pains too from sun, joy from shade.
Can deaf hear flute, blind see a scene?
So joy by self alone is seen.

Warmth from fire or the sun gives us joy. In certain stages the shade only causes sorrow. Likewise the shade gives us joy and the sun causes sorrow. Can one who has not the slightest feeling and is stone-deaf ever enjoy the sweet music of the flute? Or can one born blind ever know a beautiful scene ? Surely not. So, in the world, for every living being pleasure is more personal and of the nature of a safeguard.

6. குடும்பவியல்.

1. காதல் நிலே.

நல்லிளமைக் காலத்தே நெஞ்ச நறுநிலத்தின்
வில்லெழுந்த அம்புவிழி வித்தூன்றச்—சொல்லெருவில்
வேட்கை மழையா வியனம்பல் வெய்கதிராப்
பூட்கையுறுங் காதலெனும் போது! 26.

பொழிப்பு: நல்ல இளமைக் காலத்தில், நெஞ்சம் என்னும் நன்னிலத்தின் கண், வில்லினின்று விசைந்தெழுந்த அம்பு போலும் கூரிய விழி எண்ணம் என்னும் விதையை ஊன்றவும் பின் நெருங்கிய காதலர் தாம் உரையாடும் சொற்களே அதற்கு எருவாகவும், உயிராலும், மனத்தாலும், உடலாலும் அவாவுகின்ற வேட்கையே மழையாகவும், அவர் தம் களவு நிலேயைப் புறம் பழிக்கும் ஊராரின் பரந்துபட்ட தூற்றுதலே வெயிலாகவும் நின்று உதவ, அவ்விதை மூளைத்து வளர்ந்து அரும்பிக் காதல் என்னும் முகையைத் தோற்றுவிக்க அது தானும் மலர்ந்து வலிமை பெறும்.

வலிமை பெறும் என்றது, மலர்ந்த பின் காய்த்துக் கனியும் என்பதால்.

6 FAMILY LIFE.

1 ON LOVE.

When in soil of life's prime, good hearts
To plant thought's seed bow-bent eye darts.
Fine words as manure, wish as rain,
Scandal as sun are love bud's gain. 26.

In the prime of youth, when towards the fertile soil of good heart, the bow-bent eye darts a glance, the seed of thought is planted. Fair words on closer contact serves, as good manure. The intense longing of the spirit, thought and body serves as rain and the scandal in the neighbourhood about the clandestine meetings of the lovers comes in as the life-giving sun. Thus nourished the bud of love blossoms sweet.

௨. கணவன் நிலை.

கொம்பாய் கொழுவாய் குடையாய் குடும்பமெனும்
இம்பருல காட்சிக்கோ ரேணியாய்ச்—செம்பாதி
கொண்டுங் கொடுத்துங் குடிப்பெருக்கி ஆளுதலே
மண்டுங் கணவனது மாண்பு ! 27,

பொழிப்பு : மனையும் மக்களும பற்றிப் படரும் ஒரு கொம்பாகவும, வாழ்வு எனும் நிலத்தில் விளைவு காணவேண்டி உழுகின்ற குடும்பம் எனும் கலப்பைக்குக் கொழு முனையாகவும், தம்மொடு சேர்ந்தாரை மழையெனும் செல்வ மிகுதியினின்றும், வெயிலெனும் வறுமைக் காய்வினின்றும் சட்டிக் காக்கும் குடையாகவும், குடும்பமெனும இம்மையுலக ஆட்சியின் உயர்வுக்கு ஓர் ஏணியாகவும், குடும்பத்தின் அனைத்து முயற்சிகளிலும் தாம் பாதியாகவும், தம் மனைவியும், மக்களும், பிறரும் பாதியாகவும் நின்று ஏற்று, வருகின்ற இன்பத்திலும் அவர்கட்குப் பகிர்ந்து கொடுத்து, தான் உற்ற குடி பெருகி நீளும்படி ஆண்டு நிற்பதுவே நிறைந்த கணவனுக்குரிய பெருமையாகும்.

2. ABOUT THE HUSBAND.

A staff, ploughshare, umbrella of
Household, ladder for life, half of
All moves to improve state to take
Will full the husband's glory make. 27.

The head of the house is a staff for the plant of the family and children to creep on. For the plough of the family that is to find a good yield in the land of life, he is the ploughshare. To shield those near and dear to him from the rain of poverty, he is an umbrella. To rise the family in worldly life, he is a ladder. He takes just half the share in all the attempts of the family, leaving the other half to the wife, children and others and likewise shares half the pleasure that accrues. Thus to manage the family and and to keep it and its prestige for long will redound to the husband's glory.

௩. மனைவி நிலை.

பிறப்பிற் பொருந்திப் பிழையாத அன்பால்
மறப்பின்றி இன்பம் மடுத்துச்—சிறப்புறவே
வாங்கி வகுத்து வழங்கி மகிழ்வித்துத்
தாங்கல் மனையாள் தகை ! 28,

பொழிப்பு : உயிர். உடல், உள்ளம், அறிவு, வினை ஆகிய ஐந்து பிறவி நிலைகளிலும் பொருத்தம் உடையவளாகி மனத்தானும், சொல்லானும், வினையானும் பிழையாத அன்பு கொண்டு, அகப்புற வினையழுத்தங்களால் பிறவாமல் நினைந்து தன் கணவற்கும் குழந்தைகட்கும் அவரவர்க்குரிய வகைகளால் இன்பம் ஊட்டுவித்துச் சிறப்பு நிலைகள் பொருந்தும்படியாகவே எதனையும் வாங்கியும், அதனைக் குடும்ப வுறுப்பினர்க்கேற்ற வகையில் வகுத்துப் பகிர்ந்து வழங்கியும் மகிழ்வு செய்து, இவ்வினைச் சுமைகளால் தளர்வுறாது பொறுமை பெற நிற்றல் மனைவிக்கு உற்ற சிறப்பாகும்.

3. ABOUT THE WIFE.

In flawless love and birth states five
On par, to make all gay to strive,
To get the good, part and give all to please-
Such aids as these good wife will seize. 28.

A good wife should be quite on a par (with her husband) in the five states of birth such as spirit, body, thought, intellect aud deed. She should have an unerring love in thought, word and deed In spite of all subjective and objec-tive pressures, she should never forget to make her husband and children happy in their own way and according to their stages in life. Procuring good things that are proper, she should divide them among the members of the family accord-ing to their needs and make them enjoy. To patiently bear the burden that all these activities entail and tirelessly too will speak of the eminence of a good wife.

4. மக்கள் நிலை.

கொண்கன் நிறைவித்துக் கோதில் மனைநிலத்துப்
பண்குதலை யாய்விளைந்து பாலருந்தி—மண்கண்
பூத்துப்புலர்ந்து பொலிந்து புலன் பெருகிக்
காய்ந்துக் கனிதல் கடன்! 29,

பொழிப்பு : கொண்ட கணவனது நிறைந்த வித்தானது, குற்றமற்ற மனைவி என்னும் நிலத்து ஊன்றப்பெற, அது குழவியாய் முளைத்து மழலைப்பண் பாடிக் குழந்தையாய் முகிழ்த்துத் தாய்ப்பால் அருந்தி வளர்ந்து, இந்நிலத்தின் கண் அறிவும் உணர்வும் பூத்து நல்விளைவாக மலர்ந்து, அழகுற்று விளங்கி, கரண கருவிப் புலன்கள் முதிர்வுற, உலக உயிர்களின் மலர்ச்சியின் பொருட்டாய்த் தானும் காய்த்துக் குலுங்கி, அவற்றின் பயனுக்குக் கனிந்து உதவி நிற்றல் மக்கட்கமைந்த கடமையாம் என்க.

4. ON CHILDREN

Husband's seed in good wife's fair land
Crops as sweet babe, fed on ma's brand ;
It has to blossom, develop
Its organs and turn as fruit ripe. 29.

If the full ripe, good seed of the husband be implanted in the fertile soil of the wife, it sprouts as a sweet babe and turns as a bud of sweet prattling Child. Fed on the mother's milk, on earth it develops its various organs in accordance with the evolutionary laws of worldly lives and brings forth fruits that mellow in course of time as ripe fruit for the world. This is what children should do.

௫. ஈடுபாட்டு நிலை

அன்பறிவுக் கொத்தவினை ஆன்ற பயன்பகிர்வால்
இன்பநுகர் வெல்லார்க்கு மேற்பவே—துன்பநிலைக்
குள்ளந் துவளாமல் ஓங்குநிலை கண்டறிந்து
கொள்ளல் குடும்பநிலைக் கூறு! 3

பொழிப்பு: அன்புக்கும், அறிவிக்கும் பொருந்திய வினைகளால் வந்த பயன்களைப் பகிர்ந்து மடுக்கும் இன்ப நுகர்ச்சி குடும்ப உறுப்பினர்களுக்கு எலலார்க்குமே பொருந்துமாறு துய்த்தலும், மேலிடும் அகப்புறத் துன்பநிலைகளுக்கு உள்ளம் துவளாமல், எல்லாத் தகுதிகளிலும் உயர்ந்து ஓங்குகின்ற நிலைகளைக் கண்டு அறிந்து கைவிடாமல் உறுதியாகப் பற்றிக் கொள்ளுதலும் குடும்பவளர் நிலைக்குற்ற கூறுகளாகும்.

5. ON INTERESTED INDULGENCE.

Share fruits of deeds through knowledge, love
So that all can enjoy full now.
Know time those in distress to raise;
To hold on firm is stage to rise. 30.

Share with all the members of the family the fruits of deeds in full accord with knowledge and love so that they may also enjoy equally. Without being disheartened by the external and internal distressing circumstances, learn and acquire all befitting qualifications and hold on firmly. That is the way to maintain the praise-worthy position of a good family.

'அகரமுதலி'

1929-இல் எருதந்துறைப் பேரகரமுதலியின் இறுதிப்பதிப்பு வெளியிடப்பட்டது. 1838-இல் தொடங்கிய முயற்சி 1884-இல் அச்சுக்கு வந்தது. 46 ஆண்டுகளாக இதன் பகுதிகள் வெளிவந்து கொண்டிருந்தன. 1897-இல் அகரமுதலியின் 'வைர விழா' கொண்டாடப்பட்டபோது இச்சொற் கருவூலம், விக்தோரியாப் பேரரசியாருக்கு உரிமையாக்கப்பட்டது. இவ் வகரமுதலி வெளியிடுவதற்கான மூன்று இலக்கம் 'பவுன்கள்' செலவை எருதந்துறைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டது 1905-இல் பொற்கொல்லர் கழகத்தின் சார்பில் '5,000 பவுன்கள்' இதற்காகத் தரப்பட்டது. பல அறிஞர்கள் தங்கள் வாணாளையும், உழைப்புச் சக்தியையும் இதற்காகவே செலவிட்டனர்.

'Set' என்ற சொல்லின் சரியான பொருளைக்கண்டு, நிறைவாக அமைப்பதற்கு மட்டும் நாற்பது மணி நேரம் அறிஞர்கள் கூடிக் கலந்துரையாட வேண்டியிருந்ததாம். இச்சிறிய சொல்லுக்குமட்டும் 51 தனிப் பொருள்கள் இருந்தனவாம்! இதன் அடிப்படையில் 'Set out' முதலிய 83 சொற்றொடர்கள் வழக்கில் உள்ளனவாகக் காணப்பட்டனவாம். இச் சொல்லைவிட மிகக் கடினமான சொல் அகரமுதலியிலேயே இல்லை என்று பர். மர்ரே என்பார் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

'வெப்சுடர்' அகரமுதலியில் இச்சொல்லின் பொருள் இரண்டு பத்திக்கு மேல் செல்கிறது. வெளிவந்திருக்கும் ஆங்கிலப் பேரகரமுதலியில் பதினெட்டுப் பக்கங்களுக்கு மேலாக இச்சொல்லின் பொருள் விரிகிறது.

பதிப்பாசிரியர்களில் முகாமையானவர்கள் :

கோல்ரிச்சு, பரினிவல், பர். என்றி பிராத்லி, பர். கிரெய்சி, பர். அனியன்சு, பர். மர்ரே ஆகியோர்.

இவ் வகரமுதலியில் 4,14,185 சொற்களும், 5,00,000 சொற்பொருள்களும், 18,27,204 சொற் பயன்பாடுகளும் பன்னிரண்டு நூற்றுண்டுகளாக நிகழ்ந்த சொற்களின் வரலாறும் ஆராயப்பட்டுள்ளனவாம்.

[தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க]

என்னைப் படைப்பேன்!

—நா. திருமலை.

கன்னற் சுவைதரு பாஷியமே!
கருத்துச் சரமே! கனியமுதே!
மன்னும் உயிர்க்கொரு வழித்துணையே!
வையம் ஏத்திடும் பொதுமறையே!
நாடித் துடிப்பே! தமிழ்மூச்சே!
நல்லறம் பாடும் உயிரேடே!
வாடிக் கிடக்கும் நெஞ்சினில்தேன்
வார்க்கும் இன்பப் பாலூற்றே!
பாட்டோ எழுதிப் பழக்கமில்லை!
படித்தேன் கேட்டேன் உன்புகழை!
ஏட்டுக் கிறையே! உன்பெருமை
இளையேன் உரைத்தற் கியலுவதோ?
உன்னினை வாலே ஒன்றுசெய
உள்ளம் நினைப்பதை உரைக்கின்றேன்!
என்நாட் டுக்கும் என்மொழிக்கும்
என்னைப் படைப்பேன்! சரிதானே?

[19-ஆக் பக்கத் தொடர்ச்சி]

இதில் 'S' என்ற எழுத்துப் பகுதியே மிகப் பெரியதாகும். இதில் 57,428 சொற்கள் உள்ளன. X, Y, Z என்ற மூன்றெழுத்துக்களும் சேர்நத பகுதியில் 4746 சொற்களே உள்ளன.

கல்வி அறிவிலும், நாகரிகத்திலும் முதிர்ந்து விளங்கும் ஒரு நாட்டினரின் மொழி ஆர்வத்தையே இவ்வகரமுதலி நினைவுபடுத்துகிறது.

பல ஆண்டுகள் பசி நோக்காது, கண் துஞ்சாது கருமமே கண்ணுயிருந்த சில அறிஞர்களின் அயராத உழைப்பு, சலியாத முயற்சி, ஒப்பற்ற ஓர் அகரமுதலியை ஆங்கில மொழியினர் பெருமையோடு சுமந்து நடமாடத் துணைபுரிந்திருக்கிறது.

மொழியினைத் தங்கள் விழிகளுக்கு இணையாகக் கருதுகின்ற ஆங்கிலேயர்களின் மனப்பக்குவம் தமிழர் எண்ணி வியக்கத்தக்க ஒன்றல்லவோ?

'அதிசய உண்மைகள்' என்னும் நூலில் இருந்து எடுத்து விடுத்தவர் 'பழங்குடி'.

“அழுகும் உறுப்பு”

(GANGRENE)

— வே. செல்வக்குமார். —

‘இழையத்தின்’ (Tissue) பெரும் பகுதிகள் அழுகி இறந்துபடு தலையே ‘அழுகும் உறுப்பு’ (Gangrene) என்பர்.

பொதுவாகக் கை கால்களின் இறுதி பகுதிகளிலும், சிறு குடலின் பகுதிகளிலும் சில சமயங்களில் பித்தப்பை, கணையம், விரை ஆகிய உறுப்புகளிலும் இந்த நோயைக் காணலாம். “திசு அழிவு” (Necrosis) என்பது, அணுக் குழுக்களின் மடிவை மட்டும் குறிக்கும்; ஆதலின் “அழுகி மடியும்” முறையால், இதனிருந்து ‘அழுகும் உறுப்பு’ முற்றிலும் மாறுபடுகின்றது.

அறிகுறிகள் (Symptoms):

நோய் உள்ள இடத்தில் பாய் குழல் துடிப்பு. வடி குழல் குருதி ஓட்டம், அந்த அங்கத்தின் இயக்கங்கள், சூடு, தொடு உணர்ச்சிகள் ஆகியன மிகவும் குறைந்திருக்கும். அந்த பாகத்தின் நிறம் சூழ் நிலைக்கொப்ப பலவிதமாகக் கருஞ்சிவப்பு, பல வண்ணப் புள்ளிகள், மங்கிய வெளுப்பு என மாறிக் கடைசியாக அதன் முக்கியக் குணத் தைக்காட்டும் நிறமாக கருத்த செங்கல், நீலக்கறுப்பு (அல்லது) கறுப்பு வண்ணத்தைப் பெறும். இவ்வண்ணக் கோலம் ‘குருதி நிறமி’ (Hemoglobin) யின் சிதைவாலும், இரும்புக் கந்தகம் (Iron Sulphide) உற்பத்தியாவதாலும் ஏற்படுகின்றது.

நோயின் தன்மையைக் கொண்டு இதனை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை,

1. உலர்ந்த வகை (Dry),
2. ஈரமுள்ள வகை (Moist).

உலர்ந்த வகை:

குருதி ஓட்டம் சீராகக் குறைந்து இழையம் உலர்ந்து படும் போது, இந்த உலர்ந்த அழுகு உறுப்பு ஏற்படுகின்றது. எடுத்துக் காட்டாக, “பாய் குழல் தடிப்பு” (Atherosclerosis) நோயில் இது ஏற்படும். சான்று “முதிர்ச்சி (Senile) அழுகும் உறுப்பு” ஆகும்.

நோய் உள்ள இடம் உலர்ந்து காணப்படுவதுடன், தொடுவதற்கு வெண்ணெய் போன்று மெதுமெதுப்பாயு மிருக்கும்.

ஈரமுள்ள வகை :

பாய்குழலுடன், வடிகுழலின் குருதி ஓட்டமும் தடைப்படும் போது (அல்லது) முடிச்சினாலோ. குருதிக் கட்டியினாலோ வடிகுழல் அடைபடும்போதும், இந்த ஈரமுள்ள அழுகும் உறுப்புஏற்படுப ஈங்கு நோய் கண்ட இடம் வீங்கியும், நிறம் மாறியும், மேற்தோல் கொப்புளம் போன்று உயர்ந்தும் இருக்கும்.

அழுகும் உறுப்பின் பிரிவு :

உயிருள்ள இழையத்திற்கும், இறந்த (அல்லது) அழுகுமிழை யத்திற்கும் இடையே, முதலில் ஒரு எல்லைப்பிரிவு தெரியும். இதைத் தொடர்ந்து புண் ஏற்பட்டு, ஒரு "இறுதி எல்லைப் பிரிவுக்கோடு" (Final line of demarkation) உண்டாகி அந்த அழுகிய உறுப்பு பிரிந்து விடுகிறது; அதாவது கசிந்து, களிந்து, அழுகி விழுந்து விடுகின்றது எனலாம்.

உலர்ந்த அழுகும் உறுப்பில் இறுதி எல்லைக்கோடு மிகவும் விரைவாக சின்னாட்களிலேயே தொடங்கி பிரிவு நேருகின்றது. ஆனால் நெஞ்சில் ஈரம் கொண்டு, தான் பெற்ற இன்பத்தை உலக முய உய்க்க வாரி வழங்கிய பலர் இறுதியில் துன்பத்தையே அடை தற்போன்று, ஈரமுள்ள அழுகும் உறுப்பில் நோய்க் கிருமிகள் நுழைந்து, சீழ் பிடித்து அருகிலுள்ள இழையத்திற்கும் பரவி, இறுதி எல்லைக்கோடு உயர்ந்து விடுகின்றது.

அழுகலின் பரவல் :

அருகே விரிதல், பாய்தல், கிருமிகளால் பெருகுதல் ஆகிய முறைகளால் பரவும். நுண் உயிர்களால் பரவுதல் எல்லைக்கோட்டைக் கடந்து, நீர்மக் குழல்கள் (Lymphatic Vessels) வழியாகவோ, திசுக்களின் வழியாகவோ பரவுவதை அடுத்து பரந்த சுழற்சியாக (Extensive Inflammation) முடியும.

இந்நோயின் முதலைக்கொண்டு இந்நோயை வகைப்படுத்தலாம். அவையாவன :

1. குறிப்பிக்கின்ற வகை (Symptomatic) :

இவை பாய் குழலில் ஏற்படும் அடைப்பால் உண்டாவன.

சான்றுகள் :

I. தடிப்புப் பாய் குழல்' ஒன்றில் ஏற்படும் 'குருக்கட்டி' (Thrombosis) நோய்.

2. "இருதயக் குழாய்க் குருதிக்கட்டி" (Coronary thrombosis) அல்லது "ஊற்றறை ஒழுங்கீனச் சுருங்குதல்" (Auricular Fibrillation) உள்ள இருதயத்திலிருந்து வந்த கட்டியால் ஏற்படும் பாய் குழல் அடைப்பு.

3. சர்க்கரை நோயில் உள்ள "பாய்குழல் சுழற்சி" (Arterifis).

4. "குருதிக்கட்டி-குழாய் அழற்சி" (Thrombo Angitis).

5. இரேநாடு (Raynaud's) நோயில் உள்ள பாய் குழல் வேலை நிறுத்தம்

6. சில மருந்துகளின் நேரடிப் பாய்குழல் நுழைவு.

2. நுண்ணுயிர்களால் தொற்றும் வகை (Infective) :

1. கொப்புளமும், சிரங்குகளும.
2. வாயு அழுகு உறுப்பு (Gas Gangrene).
3. விரைபபை அழுகல் (Gangrene of the Scrotum).
4. அழுகும் வாய் அழ்றசி.

3 அதிர்ச்சி (Traumatic) :

அ. நேரடியானவை :
1. நெரிசல்.
2. அழுத்தப் புண்.

ஆ. மறைமுகமானவை :
அழுகும் உறுப்பிற்குச் சிறிது தள்ளி குழாய்களுக்கு உண்டான காயம்.

4. பௌதிகக் காரணங்கள் :

1. தீக்காயங்கள்
2. கடுங்குளிர்ப் புண்கள் (Frost bire).

3. ரேடியம்.

4 X–கதிர்கள்.

5. மின்சாரம்.

முக்கியமாக அழுகலின் வகையையும், அது உள்ள உறுப்பையும், அருகில் உள்ள திசுக்களுக்கான குருதி ஓட்டத்தையும் பண்டுவம் (Treatment) சார்ந்துள்ளது.

சிறுகுடல் பிரிவு அழுகல், மோசமாக நசுங்கிவிட்ட பாகங்கள் அல்லது வேகமாகப் பரவும் அழுகும் வகை போன்ற சடுத்தப் பண்டுவத்தேவைகளுக்கு "உயிரினைக் காக்கும் தறித்தல் (வெட்டுதல்)" (A life saving excision or amputarion) வேண்டியதாகிறது. கை, பாதம் அழுகும் உறுப்புகளுக்கு, "பகுதியைக் காக்கும் நிலை" தேவையாகிறது. எவ்வளவு பங்கை நீக்கவேண்டும் என்பதைக் கணிப்பது அறுவை தேர்ச்சியாளரின் பொறுப்பாகும்.

"தறித்தல் (வெட்டுதல்) என்பது அறுவை மருத்துவத்திலேயே, ஒரு பொருள் பொருந்திய, அத்துடன் மிகச்சிறந்த அறுவை முறைகளில் ஒன்றாகத் திகழ்கிறது" என்று அறிஞர் கூறுவர்.

பாய்குழல் பாதிக்கப் பட்டிருந்தால், அழுகலுக்கு மேலுள்ள பகுதிக்கு நல்ல குருதி ஓட்டத்தை நேரடிப் பாய்குழல் அறுவைச் சிகிச்சை (அல்லது) பாய்குழலை ஆட்டுவிக்கும் 'தானியங்கி நரம்பு மண்டலப் பிரிவு' அறுவை மூலம் செம்மைப்படுத்துவதிலும் பண்டுவம் சார்ந்திருக்கிறது. (இவைகளை விளக்கப் போயின் அது ஒரு பெரும் நூலாய் முடியும்.) ஆனால் எப்படிப்பட்ட பண்டுவம் செய்த போதிலும், சீரான குருதி ஓட்டம் ஏற்படுத்தப்படுமேயாயின், 'காப்பாற்றும் தறித்தல்" போதுமானதாகிறது. சீரான குருதி ஓட்டம் ஏற்படுத்த முடியாத காலை நல்ல பகுதியையும் சேர்த்துச் செய்யவேண்டிய 'உயர்ந்த அளவு தறித்தல்' தேவையாகிறதென்பர். தறித்தலுக்குப் பின்னர் அந்தப் பகுதிக்கு மிகவும் தொல்லையுள்ள பண்டுவமும், அந்த நோயாளிக்குக் குமுகத்தில் பழகவேண்டிய மன நிலைக்கு ஊக்கமான பழக்க வழக்கங்களையுங், வருத்தத்தை நீக்கும் மனப் பயிற்சியையும் அளித்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

உரூசோ.

அ. பொன்னையன்.

மக்கள் நெஞ்சில் சூழ்ந்திருக்கும் அறியாமை இருளை விலக்கி அறிவு ஒளியை ஏற்றிவைக்கும நல்லாராக உரூசோ தோன்றினார். அவரது வாழ்வு தூங்கிக்கிடந்த மக்களைத் தட்டியெழுப்பியது; தளர்ந்து கிடந்த நரம்புகளை முறுக்கேற்றியது; கட்டிக் கிடந்த விழிகளை அவிழ்த்துவிட்டது; தக்கைகளால் அடைத்து வைக்கப் பட்டிருந்த செவிகளை திறந்து விட்டது; எண்ணத் தெரியாத உள்ளங்களை எண்ண வைத்தது; ஏமாற்றுக்காரர்களை இனங்காண வைத்தது; புதுமை வாழ்வைச் சுட்டிக்காட்டியது! பொதுவாக வாழ்வியலின் சிறந்த நோக்கங்களை விளக்கும் மெய்யுணர்வாள ராகத் திகழ்ந்தார்.

இன்றைய மேலை நாட்டு முன்னேற்றங்களுக்கெல்லாம் அடிக் கல் நாட்டிய நுண்ணறிவாளர் உரூசோ. அவரது கருத்துகளை ஏற்றுப் பாராட்டிப் பின்பற்றும் இன்றைய உலகம் அனறு அவரைப் பகடிக்குரியவராக மதித்தது என்பதை அறியும்போது நல்லார் நெஞ்சம் நடுங்கும்! நாடி நரம்புகள் அனைத்தும் ஒடுங்கும்! அடடா! என்ன உலகமோ? நல்லவர்களையும் அவர்கள்தம் மெய்யுரைகளையும் காலத்தில் அறிந்து உணர்ந்து போற்றுமல, அவர்களது இறப் பிற்குப் பிறகே தெரிந்து கொள்ளும் வாழ்வியல் வெறுக்கத்தக்கது! இக்கருத்து கசப்பான உண்மையுமாகும்!

அன்றைய உலகம் உரூசோவை ஒரே இடத்திலிருந்து நிறை வாக வாழ விடவில்லை! தன்னைத் தானே சுற்றிக்கொண்டு கதிரவனை யும் சுற்றிவரும் இந் நிலவுலகம் போல நாடு நாடாகச் சுற்றிக் கொண்டிருந்த உரூசோ மெய்யறிவு என்னும் ஒளி விளக்குடனும் சுற்றிக் கொண்டிருந்தார் என்று எண்ணும்போது அவரது நம்பிக் கையும் அஞ்சா நெஞ்சமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன! துன்பமும் இன்பமும் கலந்ததுதான் வாழ்வு என்பதை நன்கு உணர்ந்துகொண்ட சான்றோர்களால்தாம் அவ்வாறு வாழமுடியும்!

28-6-1712-இல் பிறநத உரூசோவின் தந்தை ஐசக்கு உரூசோ தாய் சூசன்னே பெர்னார்டு; பிறப்பிடம் சினிவா (சுவிட்சர்லாந்து). அவர் பிறந்த பத்தாம் நாள் அன்னை யிறக்கவே, தம் அத்தையால்

வளர்க்கப்பட்டார். அடுத்தவர்களுடன் பழகாத கோழையாக அவர் இருந்தார். ஒழுங்காகப் பள்ளிச்சென்று படிக்காதவர் ஏழாம் அகவையில் எழுதப் படிக்கக் கற்றார். தந்தையார் இரவுக் காலங்களில் வீர வரலாறுகளைச் சொல்லி நாட்டுப் பற்றையூட்டி வந்தார்.

சின்.வாவின் மேலலுவலர்களைப் பகைத்துக் கொண்ட ஐசக்கு உரூசோ அங்கிருந்து வெளியேறினார். அம்மானின் உதவியுடன் மதக்குரவர் ஒருவரிடம் இலத்தீன் மொழியையும் பொதுச் செய்திகளையும் தெரிந்துகொண்டு அங்கே தொடர்ந்து படிக்க வியலாததால் வெளியேறிப் பொழுது போக்குச் செயல்களில் ஈடுபட்டார்.

மக்களை உழைக்க வைக்கும் தூண்டல் ஒன்று இருக்கின்றது என்றால் அது வயிறு எனலாம! உணவு முகாமையான தேவையாக இருநது தானே மக்களை இயக்குகிறது? அதன் உருவில் மறைந்துகொண்டு இருப்பதே பொருளாகும். அப்பொருளைத் தேடவே ஒவ்வொருவனும் முயன்று கொண்டு எதையெதையோ செய்து வர நேர்கிறது. இப் பொதுக் கருத்துக்கு நம் உரூசோ மட்டும புறநடையாளராகி விட முடியுமா, என்ன? பற்பல வகையான பணிகளைச்செய்து இப்பொருள் என்னும் செல்வியை மணந்து கொள்ள உரூசோ படாத பாடுபட்டார். ஏறத்தாழ பன்னிரண்டிடங்களில் பணிபுரிந்தார். ஐயோ! அளியர்! எப்பணியும் அவர் நெஞ்சைக் கட்டிப்பிடித்து நிலைப்படுத்த முடியாததாகி விட்டது!

அறங்கூறவைய ஆவண எழுத்தாளரின் துணையாளராக அமர்த்தப்பெற்றுக் கருத்தொருமித்து வினையாற்றாமையால் பயனற்றவரென்று உரூசோ நீக்கப்பட்டார். சிற்பக் கலைஞர்பால் பணிபுரிகையில் குறித்தக் காலத்தில் வாராமையால் தண்டனை பெற்றுப் பிறந்த நகரை விட்டே வெளியேறினார். இவ்வாறு பணிகள் பலவற்றை அணியணியாக ஏற்று எதிலும் நாட்டம் இல்லாமல் மனஞ்சலித்து நின்றவர் முன் மதம் தென்பட்டது. இருந்த மதத்தைவிட்டு பிறிதொரு மதத்தில் சேர்ந்துவிட்டால் வளமாக வாழும் ஏந்துகள் கிடைக்கும் என்று நம்பி மாறினார். ஆனால் அன்றிரவே நடைபாதையில் உறங்கும் நிலையே அவருக்கு ஏற்பட்டது. மதம் மாறியும் மனம் மாறாமல் இருந்தது. மதம் மாறுவதால் மட்டும் உயர்ந்த வாழ்வு வந்துவிடாது என்பதை அவர் நன்றாகத் தெளிந்தார்.

உயர்ந்த நோக்கம் கொண்டு வாழ்பவர்க்கு மதம் உதவாது என்ற உண்மையைப் பட்டறிந்தார்.

ஒருவன் வினையாற்ற விரும்பாவிட்டாலும் பசிக்கு உணவிடவும் விருப்பம் இல்லாமல் இருப்பானா? அல்லது இருக்கத்தான் முடியுமா? பசி வந்திடில் பானையின் சோற்றுப்பற்றும் அமுதமாகாதா? பற்றுகள் அனைத்தும் மனத்தை விட்டுப் பறவைகள்போலப் பறந்து விடுமே! வயிற்றோடு வாழ்வது அரிது! எனவே சோற்றுக்குத் திண்டாடிய உரூசோ செல்வப்பெருமாட்டி ஒருத்தி பால் சென்றார். அவள்வழி மடல் ஒன்று பெற்று மற்றொரு பெருமாட்டியிடம் எடுபிடி ஆளாக நேர்ந்தது. கவலையின்றி நிறைவாக இருந்தார். களைத்து வந்து மரத்து கிழலில் படுத்தவனை நிழல் சாய வெய்யல் வருத்தி எழுப்பி விரட்டுவது போல ஊழ் உரூசோவை அங்கிருந்தும் விரட்டு கிறது! அச்செல்வம் மிக்க பெருமாட்டி இறக்கவே. செல்வர் ஒருவரிடம் சென்று வேலைக்கு அமர்ந்து சின்னாள்களில் அங்கிருந் தும் அகன்றார். காட்டாற்று வெள்ளம் பள்ளம் நோக்கிப் பாய்வது போல பிடிப்பற்று ஓடிக்கொண்டிருக்கும் உரூசோ வாரென்சு பெரு மாட்டி (Madam de warens) என்பவளிடம் சென்றார். அவள் அன்னெசி (Annecy) என்ற ஊரிலிருந்தாள். இந்நல்லாளின் ஆதர வில் பத்தாண்டுகள் வாழ்ந்தார்.

எவனும் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் மிக்கவனாகவே இருப்பான்! அவ்வகையில் உரூசோவும் தம்மை எப்படியேனும் உலகம் போற்ற வாழவேண்டும் என்று கருதினார். ஆகையால் மதக் குரவராக எண்ணினார்; முயன்று தோல்வி கண்டார்; கேட்டாரைப் பிணிக்கும் கெழுதகைமையுடைய இசைக் கலைப்பயின்று பிறரால் எள்ளப்பட்டார். பிறகு பாரிசு படைக்கல உயர்தர அலுவலர்க்குச் செயலாளரானார்; ஆனால் சொல் லொணாத்துயருற்றார். அங்கே இசைக் கலைஞரானார்; பொது மக்கள் ஆதரவைப் பெற்றுப் போற்றப்பட்டார்; எனினும் இசைக்குழுவின ரால் புறக்கணிக்கப்பட்டுக் பகடிக் குரியவரானார்.

உலகியல் என்னும் பட்டடையில், காய்ச்சி யுருக்கப்பட்ட கம்பி யாகிய மனம், துன்பம் என்னும் சம்மட்டி கொண்டு தாக்கப்படுவ தால், பட்டறிவு பெற்றுப் பளபளக்கின்றது! 'துன்பம் உறவரினும்

செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை' என்ற கட்டளைக்கு அடிபணிந்து நடந்துவரும் உரூசோ, அரிய செய்திகளையும், கதைகளையும் பக்குவமாக கவர்ச்சியாக எடுத்துச் சொல்லும் வல்லமையுடையவராக ஒளிர்ந்தார்! எனவே பெருஞ் செல்வப் பெருமாட்டிகளின் அன்பிற்கு உரியவரானார். திண்ணிய நெஞ்சும் நுண்ணிய அறிவும் அவர்களைக் கவர்ந்தன! இவரது அறிவு நல்ல நிலையில்பயன் படவேண்டும் என்று எண்ணினர். அறிவுடையோனை அரசனும் மதிப்பானன்றோ! அறிவு உடையார் எல்லாம் உடையார்தாமே! உடனே அந்நற்குண நங்கையர்களின் பரிந்துரைகள் உரூசோவைப் பிரெஞ்சு நாட்டுத் தூதுவருக்குச் செயலாளராக ஆக்கிவிட்டது! புதுமைக் கருத்தும் பொதுமை விருப்பமும் பற்பல வகையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு உதவின! நல்லார் கண் பட்டத் திருவானது எல்லாரகும் பயன்படுவதுபோல உரூசோவின் செயலாளர் பதவி அனைத்து நற்செய்கைகளுக்கும் தூண்டுகோலாகி நின்றது! தூதுவரின் பாராட்டைப் பெற்றார். எப்போதும் பொறாமை என்ற நஞ்சை இவ்வுலகம் போற்றி வந்திருக்கிறது. அது வெறுக்கத் தக்க பண்பு எனபது ஒருபுறமிருக்க எட்டிப்பழம் கவர்ச்சியாக இருப்பது போன்று கயவர்களைக் கவர்ந்துவிடுகின்றது! அயலான் ஒருவன் வெகுவாகப் பாராட்டப்படுவதைக் கண்டு அலுவலர்கள் வெறுத்தனர். அவரைக் கடுஞ்சொற்களால் ஒறுத்தனர். பொறுத்துக்கொள்ள வியலாததால் உரூசோ வெனிசை விட்டு மீண்டும் பாரிசுக்கு வந்தார். அங்கே 'செயின்ட்டு குவென்டின்' என்ற உணவு விடுதியில் தங்கினார். தோல்விகளையே தொடர்ச்சியாகப் பார்த்துப் புண்பட்ட நெஞ்சங்கொண்ட உரூசோ, நண்பர்களிடம் பழகுவதை நிறுத்திக் கொண்டார்; தனிமையை நாடினார்; நன்னூல்களை ஆழ்ந்து படித்தார்; படிக்குங்கால் நல்லபகுதிகளை மனப்பாடஞ்செய்தார். கற்றனைத்தூறும் அறிவைப் போற்றி வளர்த்தார். அவ்விடுதியில் பணிப்பெண்ணாக இருந்த தெரேசா லெவாசிர் (Therese Le vasseur) என்ற நல்லணங்கை விரும்பி, மணந்தார்.

குமுகாயத்தில் எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு, குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அல்லல் பட்டுக்கொண்டிருந்த உரூசோவுக்கு ஆறுதல் அளிக்கவும் அன்புரை கூறவும் இன்சொல்லால் மகிழ்விக்கவும் ஏற்ற இனிய துணையைப் பெற்றுக்கொண்டதே பெரும் பேருகும். தெரேசா படிக்காதவர் என்றாலும் பண்பாக

நடந்துகொள்ளத் தெரிந்தவர். செல்வப் பெண்டிர் தம்முடன் நன்கு நடந்து பழக அவர் அறிந்தவர், பொதுவாக உருசோவுக்குக் கிடைத்த நல்லறிவு' அவர் மனைவி!

தனியாகத் திரிந்து கொண்டிருந்த உருசோ இப்போது குடும்பம் எனனும் தளையில் பிணிப்புற்றதால், வாழ்க்கைக்குரிய பொருளையும் வருவித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். வேலை தேடி அதன் வழி வருவாயைக் கொள்ள உருசோவால் இயலாது. அத்துறையில் அவர் பெருந்தோல்வியுற்று விட்டார். எண்ணும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவன் எவனும பிறர்க்கு அடங்கி ஒடுங்கி வாழ நினைக்கமாட்டான். தன்னைப்பற்றியும், தான் வாழும் மக்கள் கூட்டததைப் பற்றியும ஆழ்ந்து நினைக்கத் தொடங்கிவிட்ட உருசோவை வேலைககு வைததுக்கொள்ளத் தனிப்பட்டவனும் சரி, நிறுவனமும் சரி, அரசு அலுவலங்களும் சரி—அணியமாக இல்லை. எனவே இப்போதுதான் தனது அறிவைப் பயன்படுத்தி வாழத் தலைப்பட்டார்; சிறியதோர் இசை நாடகம் எழுதி, அதன் மூலம் சிறு தொகையைப் பெற்றுக் குடுமபச் செலவுக்கான அடிப்படைக்கு உதவினர். தன் இலலாள் மகிழும்படி நடந்துகொண்டார்! சுவையுணவுண்டார்; பிறவிடங்களுக்குச் சென்று களித்தார். பொருள் பற்றுக்குறை நேருமோ என்று எண்ணியபோது, அவருக்கு அறிமுகமான பிராங்க்குயில் (Francueil) என்பவர் ஆய்வு செய்து வெளியிடும் அறிவியல் நூலுக்கு உதவி கோரிச் சிறு தொகையை வழங்கினர். அதனல் ஒருவாறு பொருள் முட்டுப்பாடு தீர்ந்து, அமைதியாக வாழ்ந்தார். பெருமாட்டி யொருத்தித் தான் எழுதும் நூலுக்கு உதவுமாறு கொஞ்சம் பணங்கொடுததாள். இவ்வாருன வரவு உருசோவின் குடும்பச் செலவுகளுககுப் போதுமானதாக இருந்தது.

இலக்கியக் கழகமொன்று நடத்திய இரு போட்டிகளில் கலந்து கொண்டு கட்டுரைகள் வரைந்தார். முதல் கட்டுரைக்குப் பரிசு கிட்டியது. மறு கட்டுரை பரிசைப் பெற்றுத் தராவிடினும் நூல் வடிவம் பெற்று வெளியிடப்பட்டது. அதனல் தாயகம் சென்ருர். சினிவா மக்கள் ஆரவாரித்து வரவேற்றனர். நான்கு மாதங்கள் கழித்துப் பாரிசுக்குச் சென்ருர். உருசோ நூலாசிரியர் என்று அறிந்தவர்கள் நன்ருகப் பழகினர். செல்வர்கள் மதித்துப் போற்றி

னர். டெ’எப்பினே (D'Epiney) என்ற செல்வரின் வீட்டில் தங்கினுர். டெ’ எப்பினே பெருமாட டி எழுதியதை அடிக்கடி படித்துக் காட்டி நச்சரித்து வந்ததால் மனம் வருந்தினுர். என்ருலும் ஒருமையுற்ற மனங்கொண்டிருந்ததால் எழுதக் கருதிய நூல்களுக்கு இங்கே குறிப்புகளை எழுதினுர், எழுத அவ்வம்மையார் இடராக இருந்ததால் அவ்விடம் விட்டு அகன்ருர்.

அவ்வூரிலேயே பழைய வீட்டில் இருந்துகொண்டுதான் குமுகாய ஒப்பந்தம் (The Social contract), எமிலி (Emile) என்ற நூல்களை எழுதி முடித்தார். பேரறிவு படைத்த உருசோவை இனங்கண்டுகொண்ட அடுத்த வீட்டுக்காரர் தம் மாளிகையில் இருக்கும்படி வேண்டினர். ஆங்குச்சென்று சூலி அல்லது புதிய கெலாய் (Julie or the new Helaise) என்னும் புதினம் எழுதினுர்.

மேற்கண்ட மூன்று நூல்களையும் அச்சிட்டார்.

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்"—என்று

சூளுரைத்து நின்ற உருசோ தமது அறிவுக் கொழுந்துகளை உலக நன்மைக்காகப் பொத்தக வடிவில் உலவ விட்டார்,

சூலியை மக்கள் ஆராக் காதலொடு ஆழ்ந்து படித்தனர். அக்கதை உருசோவைத் தலைவராகக் கொண்டிருந்தது. சிலர் கருத்து வேறுபாடுகள் கொண்டனர். கண்டனக் குரலொலிகள் விண்டனர்.

எமிலி, அறிஞர் பெருமகன் உருசோவின் நெஞ்சில் இருப தாண்டுகள் முளைத்து, வளர்ந்து, பூத்துக்கிளைத்து; காய்த்து, கனிந்து நின்று மூன்ருண்டுகள் அரிதின் முயன்று, இயற்றப்பட்டக் கல்விபற்றி ஆராய்ச்சி நூலாகும். அது பழைய கல்வி முறைகளுக்குச் சாவு மணி அடிப்பது ; புதுமையைப் போற்றிப் பள்ளியெழுச்சிப் பாடுவது; மாணவனை மாண்புடையவனுக ஆக்க வழி காட்டுவது ; பகுத்தறிவுக்கு ஒத்தது , முன்னேற்றப் பாதையின் கலங்கரை விளக்கு! உருசோவின் உள்ளக் கிடக்கை அது ! இன்றைய ஐரோப்பியக் கல்வித் திட்டங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக ஒளிர்வது எமிலியே !

உலகம் உய்யும்பொருட்டு உண்மைகளை வெளிப்படுத்தும் சான்ருேரை மக்கள் ஏனே மதிப்பதில்லை? தன்னலம் அணுத்துணை

இல்லாத உருசோ பொது நலத்திற்காகவே வெளியிட்ட எமிலி மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படும் என்று நம்பினூர்: பூமாந்தும் வண்டென போற்றிக் கற்றுக் களிப்பர் என்று மகிழ்ந்தார். ஆனல் நடந்ததோ அவரது நினைப்பிற்குப் புறம்பானதாகும், 'அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்திருந்த உலகர் அனைவரையும் திருத்திக் காலமுள்ள போதே பிறவிப் பயனைப்பெற்று உய்வடைந்திடவே நான் இவ்வுலகில் பிறப்பெடுத்தேன்' என்று கூறிய இராமலிங்க அடிகளாரே, 'கடை விரித்தேன்; கொள்வாரில்லை; கட்டிவிட்டேன்!' என்று கூறியிருக்கின்றார்கள் என்றால் மக்கள் ஆராய்ச்சித் திறனை என்னென்பது! மெய் வழியில் நடக்கவேண்டும் என்ற அவாவே அற்றவர்களாகத்தாம் மக்கள் வாழ்கின்றனர். மனக் குதிரையைத் தட்டியெழுப்பி வாழ்வின் குறிக்கோளை அடைவிக்க வந்த எமிலியை, அது வெளியான இரண்டாவது கிழமையே, பிரெஞ்சு மக்களவை, "எரிக்கவேண்டும்; அதை வெரும் படிக்கக்கூடாது; அதை இயற்றிய உருசோவை சிறையில் வைக்கவேண்டும்" என்று ஆணையிட்டது. 11—6—1762-இல் பாரிசு அறங்கூறவையின் முன்னர் பொதுமக்கள் பார்வையில், எமிலி பிறந்த இருபத்தொன்றாம் நாளன்று தீக்கிரையாக்கப்பட்டது! இதையறிந்த உருசோ தாய்நாடு நோக்கிச் சென்றார். சினிவாக் காப்பளிக்கும் என்று கருதினார். ஆனல் வெந்த புண்ணில் தீக்கொண்டு சுடுவது போல சுவிட்சர்லாந்திலிருக்கும் சினிவா, பெர்னி, நியூசாடல் மூன்று நகரங்களும் எமிலியை ஈவிரக்கமில்லாமல் தீக்கொழுந்துகளுக்கு இரையாக்கி, 'எம் நாட்டு எல்லைக்குள் உருசோ வருதல் கூடாது' என்று தடையாணைப் பிறப்பித்து மகிழ்ந்தது!

இந்த அவல நிலையை எண்ணி எண்ணிப் பெரிதும் மனமுடைந்தார். பாய் டி லாடூர் (Boy de la Tour) என்ற பெண்மணியின் உதவியால் பிரசிய நாட்டு மோட்டியர்சு Motiers) என்னும் ஊரை அடைந்தார்.

அங்குதான் ஐரோப்பிய தன் வரலாற்றுத் துறையில் பேரிலக்கியம் படைத்த சேம்சு பாசுவல் (James Bosewell) என்ற அறிஞருடன் நட்புக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றார், உருசோ.

தோல்விகள் ஆயிரம் எதிரினும் தூசென மதித்து, மறந்து, மீண்டும் எண்ணிய செயலில் ஈடுபடுவது ஆன்றோர் பண்பன்றோ? 'தோல்வியே வெற்றியின் படிக்கட்டு' என்பது தானே மெய்மையும் கூட? உருசோ, வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலாரைப் போன்று வாட்டத்தோடு காணப்படும் நாட்டு மக்களைக் கண்டு வருந்தி, அருளிலா ஆட்சியைக் கடிதில் ஒழித்துத் தெருளுடைய

குடியாட்சி முறையைப் பாராட்டி வரவேற்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் நுண்மாண் நுழைபுலங் கொண்டு, கரணியங் காட்டி, விளக்கந்தந்து இயற்றிய நன்னூல்தான் 'குமுகாய ஒப்பந்தம்'! உலக வரலாற்றில் மக்கள் நெஞ்சத்தை மஞ்சம் என்று கொண்ட பேரிலக்கியங்களில் ஒன்றாக நிலவும் அப்பேரிலக்கியம் வெளியாயிற்று! 'பட்ட காலில் படும்; கெட்டக் குடியே கெடும்' என்ற பொது மொழி மெய்யானது! எமிலியைக் கொளுத்தக் கண்டு மனம் புண்பட்டு நிற்கும் உருசோ, குமுகாய ஒப்பந்தத்தை சினிவாவே முதலில் கொளுத்தக் கேட்டுத் துடித்தார். அதன்பின் பிற நாடுகளும் எதிர்ப்பைக் காட்டின!

பனங்காட்டு நரியின் சலசலப்பிற்கு பண்படாதவர் தாமே அஞ்சுவர், பண்பட்ட நல்லார் துணிவோடு நடப்பர்! உண்மைகளை நெருப்பிட்டுக் கொளுத்துவதால் அழித்துவிடவா முடியும்? அவை புடம்போட்டப் பொன்னாகவன்றோ மின்னும்! பொய் கட்டிக்கொண்டு மெய் கட்டிக்கொண்டாற் போல வாழ்பவர்களைக் கண்டு நகைத்தார்! அந் நகைப்பு துயரத்தில் வந்தது. பின்னர் அரசினர்க்கும் செல்வர் களுக்கும் பல மடல்கள் விளக்கங்கள் தந்து வரைந்தார். அவை அனைத்தும் தொகுக்கப்பட்டு மலைக் கடிதங்கள் (Letters From the mountain) என்று வெளியாயின. இந் நூல் மேலும் நண் பர்களைக்குறைத்தது, ஏழைகளின் வாழ்வுக்கு ஏற்றங்காண அவாவிய உருசோ ஏழைகளிடையே ஓர் ஏழையாக வாழ்ந்தார். மக்கள் வாழ்வில் புரட்சியினைச் செய்ய எண்ணிய வால்டேயர் (Voltaire) செல்வர்களிடையில் வாழ்ந்தார். உருசோவைக் கண்டு அவர் வெறுத்தார். அதனால் வருந்திய உருசோ மோட்டியர்சை விட்டு செயின்ட்டு பீர் தீவு (Saint Pierre Land) சென்றார். அங்குதான் வாழ்விலேயே இரண்டு திங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உருசோ வாழ்ந்தார். இச்செய்தியை அவரே குறித்துள்ளார். அவர்தம் எதிரிகள் அம் மகிழ்ச்சிக்கும் முற்றுப்புள்ளி வைத்தனர். பெருன் நகராண்மைக் கழக வெளியேற்றச் சட்டத்தால் 13—1—1766-இல் அத்தீவை விட்டு வெளியேறி இங்கிலாந்தை நண்ணினார். பாம்பறி யும் பாம்பின் கால்! அறிஞரை அறிஞர் அறிந்து போற்றுவர். ஆனால் அக்காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்க ளான எட்மண்ட்டு பருக்கு (Edmand Burke), சாமுவேல் சான்சன் (Samuel Sanson) இருவரும் "மற்ற அரசுகள் புகலளிக்க மறுக் கையில் இங்கிலாந்து மட்டும் ஆதரவு தருவது ஆகாது" என்று அரசினரைக் கண்டித்தனர். அதனால் 1767-இல் உருசோ பிரான்சுக் குச் சென்றார்.

பாரிசில் பத்தாண்டுகள் வாழ்ந்தார். அப்போதுதான் எண்ணங்கள் (Reven'es]. உரையாடல்கள் (Dialogues), பிழையுணர்ந்து ஒப்புதல் (The confessions) போன்ற நூல்களை எழுதினர்.

போலந்து நாட்டைக் காப்பாற்ற உருசோ 1772 - இல் ஒரு திட்டம் உருவாக்கியளித்தார்.

பாரிசில் தொடர்ந்து வாழ விரும்பாமல் எர்மனுன்வில் (Eremenouville) என்னும் சிற்றூர்க்குச் சென்று குடியேறினர் அங்கே சியார்டின் (M. De Caiardin) என்பவர் உறுதுணையாக இருந்தார். மற்றும் பல நண்பர்கள் அவரை அழைத்தனர். ஆனால் மறுத்துரைத்து அங்கேயே இருந்தார்.

உருசோ நினைத்திருந்தால் செல்வத்தில் புரண்டிருக்கலாம்; சீராக வாழ்ந்திருக்கலாம். அவர் காலத்திலேயே அனைவராலும் புகழப்பட்டிருக்கலாம். ஆனுல் இன்றும் நம்மால் போற்றப்படுவாரா என்பதுதான் வினு.

அவர் எழுதிய ஓர் இசை நாடகம் அரசர்–அரசி முன் அரங்கேற்றப்பட்டது. அரசர் பாராட்டினர், பொது மக்களும் புகழ்ந்தனர், அரண்மனை ஏகியபின் அரசா உருசோவை ஆள் மூலம் சொல்லியனுப்பி வரும்படி கேட்டுக்கொண்டார். பரிசுகள் அளிப்பதாகவும் உறுதியளித்தார். ஆனுல் உருசோ செல்லவில்லை. அவர்தம் நண்பர்கள் அவரைக் கடிந்தனர். அரசரின் ஆதரவை இழந்துவிட்டாயே என்று வருந்தினர். ஆனுல் உருசோ. "மன்னரது அவைக்குச் சென்றிருந்தால் அவரது நிலையான நன்மதிப்பை நான் பெற்றிருக்க முடியும். மன்னருடைய அன்பையும் மதிப்பையும் நான் பெற்று விட்டால். அவருடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட வேண்டும். நெருக்கடி எனக்கு ஏற்பட்டிருக்கும் என்பதை நண்பர்கள் உணரத் தவறிவிட்டார்கள். "உண்மையைப் பேசவேண்டும், உரிமையோடு வாழவேண்டும், தன்மானத்தோடு வாழ்க்கைப் பாதையில் நிலையான இடம் பெறவேண்டும்' என்பன போன்ற என் குறிக்கோள்கள், நான் மன்னர் அவைக்குச் சென்றிருந்தால், நிறைவேற்றப்படாமல் ஒழிந்திருக்கும்''. என்று எழுதித்தெளிவுபடுத்தினர். அவரது முன்னுணர்தல் நுண்ணறிவே நுண்ணறிவு.

"ஒரு வைகறைக்கு முன் . . ."

இரணியன்.

அச்சம் தரும் இந்நீளிரவும் எனக்கு அடிபணியத் தொடங்கி விட்டது!

இவ்விரவு நீண்டுகொண்டிருப்பதனுல் என் பாதை மேலும் விளக்கம் பெறுகிறது!

என் பாதையில் எதிர்ப்படும் குன்றுகள், குழிகள், மேடுகள், சரிவுகள், முட்கள், புதர்கள் அனைத்தையுமே நன்ருக நான் இனம் கண்டு கொண்டேன்!

இரவோடிரவாய் இரைதேடி ஊர்ந்து திரியும் பாம்பினங்கள் என்னைக்கண்டு மறைந்தொதுங்குகின்றன!

அவற்றைக் கண்டு நான் அஞ்சி ஓடிய நாட்களெல்லாம் பழங் கதைகளாய்ப் பின்னின்று விட்டன!

இன்று, என் காலரவம் கேட்டு அவை மறைந்தோடும் காட்சி எனக்குள் நகைப்பையே முகிழ்விக்கிறது!

சில்லென்று வீசும் இக்கடுங் குளிர்க்காற்றினுல், என் உடலிலோ உள்ளத்திலோ சிறு மாற்றமும் ஏற்படுத்த இயலவில்லை!

எனக்குள் பொங்கிக் குமுறும் எரிபகைகளைத் தணிக்கும் விசை ஒன்றை இவ்வுலகில் எவன் கண்டறிந்திருக்கிருன்?

[முன் பக்கத் தொடர்ச்சி]

நாம் தன்னலத்தை மறுக்கின்றபோதுதாம் ஈகச் செயல்களைச் செய்து பிறர் நலத்தைச் செவ்வனே ஆற்றமுடியும் என்பதை இப் பெருமகன் வாழ்க்கை முழுவதும் நமக்குப் படிப்பினையாகின்றது.

ஒப்பற்ற இல்லத்தரசி தெரேசா தந்த தேநீரை 2—7—1778 அன்று காலை அருந்திய உருசோ, தள்ளாடிக்கீழே விழுந்து இறந்தார். அப்போது அவருக்கு அகவை அறுபத்தாறு. பூதவுடல் மறைந்தாலும் மக்கள் வாழ்வில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்த அவரது புகழுடல் நின்று நிலவும்:

ஒப்புரவி ஞல்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து,

பல்லாயிரங்கோடி மின்னல்களால் திரண்டெழும் பேரொளியும் எனக்குள் எம்மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை!

அப்பேரொளிகளை நான் கூர்ந்து கூர்ந்து பார்த்தபொழுதெல்லாம் என் கண்கள் கூச்சமென்பதையே உணர்ந்ததில்லை!

அப்பேரொளிகளால் நானடைந்த பொந்திகையும் ஒன்றுமில்லை!

'இப்பேரிரவிற்கு முன் அவைகள் வைக்கின்ற தீர்வுதான் என்ன' —என்று திருப்பித் திருப்பிக் கேட்டபடி உள்ளேன்!

குளிரும் வெம்மையும், இருளும் ஒளியும், வெயிலும் மழையும் எனக்கு வேறுப்பாடற்றவையாகி விட்டன!

என் வரவினால் இம்மண்ணில் தோன்றப்போகும் ஒரு புத்தொளியின் மேலேயே என்மனம் ஆழப் பதிந்திருக்கிறது!

"சமன் செய்துகொண்டே இருக்கும் இவ்வுலக இயக்கத்தில் என் வரவு எத்துணை முகாமை வாய்ந்தது"—என என் ஒவ்வோரடியையும் இறுக்கமாக முன் வைக்கிறேன்!

குமட்டல் தரும் பகல்புறத் தோற்றங்களும் போலிப் புனைவுகளும் இரவில் தோலுரிந்து கிடப்பதை இவ்வொளியற்ற ஒளியில் தெளிவாகக் காண்கிறேன்!

என் கண்ணில் படுபவை அனைத்தும் என் திருத்தத்திற்கு உட்பட இருப்பவைதாம் என்பதில் மட்டுமே எனக்கொரு நிறைவு!

இனி என்ன?—

என்பாதை திசை மாறாததாய் இருக்கிறது!

என் கொள்கை தெளிவுடையதாய் இருக்கிறது!

என் மனம் மழுக்க மற்றதாய் இருக்கிறது!

என் துணிவு வலிமை மிக்கதாய் இருக்கிறது!

நான் முழுமையானவனாய் இருக்கிறேன்;

எனவே—என் வினையும் செலவும் நோக்கமும் பயனும்

உண்மை! உண்மை!! உண்மை!!! முக்காலும் உண்மை!

"மறைமலையடிகள் நூற்றாண்டு விழா!"

பணியணியினர் பணிந்த வேண்டுகோள்.

இனித்தமுடைய நல்லோரே! தமிழகத்துச் சான்றோரே! இவை கேளீர்! "தமிழ்!", "தமிழ்" எனப்படுவதுதான் என்ன? எனப் பார்க்கின்—உலகத் தாய்மொழியே தமிழ்! உலக முதன் மொழி, மூலமொழியே தமிழ்! "கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில், மன்னி அரசிருந்"தது அது! "சீர்த்த கடற்கோளில் நந்தாக் கதிரொளி" அது! "வந்த குடிமரபோர்"—நம் இடைக்கால முன்னோர்—அதனைப் பேணாது, ஓம்பாது, புறந்தள்ளியதால், பொலிவிழந்து தேய்ந்தது அது! நமக்கு "அன்னை மொழி" அது! "அழகார்ந்த செந்தமிழ்" அது!

இவ்வாறு, "முன்னைக்கும் முன்னை முகிழ்த்த" அப் பழந் தமிழின்: தொன்மைத் திறமும், எண்மைக் குணமும், இயலிசை கூத்தெனும் மூவியல் வனப்பும், மூவா வாழ்வியல் இலக்கணச் சிறப்பும், இலக்கியப் பரப்பும், கழியாக் கண்ணிமையும், (பிறமொழிக் கலப்பின புன்மை தவிர்க்கும்) சலியாத தூய்மையுடன், ஒருங்கு மீண்டெழுந்து. இக்கால் மறுமலர்ச்சி எய்துமாறு, தெளிய வழி வகுத்து வநறிகோலிய மீட்பர், தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரே!

அவர் நிறைதமிழ்க் கடல்! தமிழொடு வடமொழி, ஆங்கிலமும் கரைகண்ட மும்மொழி முதுவர்! பாட்டுடைப் பாவலர்! நாட்டுரை நாவலர்! புதினப் புனைவர்! அறிவு நூல் ஆசான்! கலை நூல் அறிவர்! மொழி நூல் முனைவர்! இலக்கியப் படைப்பாளர்! சமயத் திருத்தாளர்! பலதுறை ஆய்வாளர்! புலவர்க்குப் புலவர்! வெல்லரும நல்லாசிரியர்! "பொழுதெல்லாம் தமிழுககுழைத்த தலைவர்"!

இவர் தலைமையிலேயே' இந்த நூற்றாண்டின் தமிழறிஞரும், பிற துறையாளரும தமிழ மொழி—இன—நாட்டு முப்படி முன்னேற்றங்களை, அரு முயற்சியால் உழைததுக் கண்டு நடததி வந்தனர்; வருகின்றனர் எனல் மிகையாகாது.

இத்தகைய மெய்ப் பொருளாளரின் பிறவி நூற்றாண்டு நிகழும் தி. பி. ௨00எ, ஆடவை (ஆனி)த் திங்கள் ௩௨ (1976, சூலை 15) முதல் தொடங்குகின்றது. அந் நூற்றாண்டினைச் சிறப்புறக் கொண்டாடுதல், தமிழகத்தில் உள்ள உண்மையாளர் ஒவ்வொருவர்க்கும் தலையாய கடமையன்றோ?

இவையாவுங் கருதியே, மறைமலையடிகள் நூற்றாண்டு விழாவினைப் புகழ்தெரியக் கொண்டாடும் பொருட்டுக "கோவைப் பொதுமக்கள் குழு" ஒன்று அமைந்து வருகின்றது அதில் தவ மக்களும், பெரு மக்களும், பல்துறை அறிவாளரும் இருந்து நெறி காட்டுவர். (அவர் நெறிகாட்ட. வினையாற்றுவர் "பணியணியினர்!".)

விழா, சிலம்புச் செல்வர் ம. பொ. சி. தலைமையில், இசை நிகழ்ச்சி, தமிழறிஞர் படத்திறப்பு, சிறப்புரை, கருத்துரை, தனித் தமிழ நூலாசிரியாகளுப் பாராட்டு, பட்டிமன்றம் போன்ற பல நிகழ்ச்சிகளாய் நடக்கும். அவற்றில், பேரூா சாந்தலிங்க இராம சாமி அடிகள், கௌமார மடம் சுந்தரம் அடிகள், சிவத்திரு ப. சு. மணியம், தமிழ்த்திரு. ம. ரா. போ. குருசாமி, கரந்தை ந. இராம நாதன், சமத்தூரா சையது, அ. இறையன், விடுதலை விரும்பி போன்ற பல்துறை அறிஞரும் கலந்துகொண்டு பங்கேற்றுச் சிறப் பிப்பர்.

* விழா வருகின்ற மடங்கல் (ஆவணித்) திங்களில் (செப்தெம் பரில்) நடக்கும.

"உயிர் தமிழுக்கு, உடலிம் மண்ணுக்கு" என, நாம மேன்மை யுறத் தாம வாழந்த, நற்றவக் குரிசில் மறைமலையடிகளாரின் நூற்றாண்டு நல் விழா நன்கினிது பெருமையுற நடந்தேறுதற்குக், கோவை வாழ் நனமககளும், பிறுண்டுள்ள பொதுமக்கள் அனைவரும், பொருள் வகையானும், பிற வகையானும் நற்றுணை நலகிப் புகழ் கொள்ள வேண்டுகிறேம்.

இன்னணம், கனிந்த கைகூப்புடன்,
நிறைதமிழ்ப் பணியேற்று நிற்கும்,
மறைமலையடிகள் நூற்றாண்டு விழாப்
பணியணியினர்.

செய்தித் தொடர்புக்கு :

பணியணி இயக்குநர்,
"மறைமலையடிகள் நூற்றாண்டு விழா".
126, "கல்வி அகம", வடகோவை
சிந்தாமணி அருகில், கோவை-641002.

அன்பளிப்பு

கோவை நகர உ த. க. கிளை, மறைமலையடிகளார் நூற்றாண்டு நினைவாக அன்பளிப்பு உரு. 100 அளித்துள்ளது. தென்மொழி தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

சோற்றுக் கடன் ஆற்ற ஓர் அழைப்பு!:—

'தமிழ்க்குடி தாங்குக! எழிலுடன் பொலிக!'

தமிழக மக்காள்! தமிழக மக்காள்!
தவநனி பேதைத் தம்நிலை உணரா,
அமிழகந் துயர்சூழ் தமிழக மக்காள்!
தனித்தமிழ் பேணெனத் தாய்மொழிப் பற்றினால்
இனித்தமுறும் இதழா சிரியரை வேண்டின்,
"குனிப்புறும் உளத்தெழும் நனிபல முனைப்பும்
கேடுறுந் தமிழ்மொழி காத்தற்குண டெனினும்,
அத்தகு முனைப்பின் எண்ணஞ்சொற் செயலினை
ஒத்தநல் இதழினில் புகுத்தியே அதனைத்
தூய்தமிழ் வளர்த்திடத் துகளறு விப்பின்,
ஆய்ந்தே அதனை வாங்கா தொழிவார்
ஏயுந் தமிழர் எனச்சொலப் படுவார்!
ஆதலின் இதனால் ஈட்டமொன் றிலைகாண்!
இழப்பே எமக்"கென இரங்கியே மொழிவார்!
துன்புறுந் தமிழ்க்குடி தழைக்கத் தோன்றிய
மறைமலை யடிகளின் நிறைநூற் றாண்டாம்
இன்றும் இங்கிவர்க் கிதுவே நிலையெனின்
என்னே தமிழர் தன்னே ரின்மை!
மறைமலை யடிகளைக் கேட்டும் அறியார்!
உரைப்புடை மாணிக்கர்! வரைமொழி நாவலர்!
பயில்தமிழ் வடகுலப் பரிதிமாற் கலைஞர்!
நலஞ்சேர் வேங்கடர்! புலமிகு "கா,சு."!
சேலங் கல்லூரிச் சாலும் இராயர்!
தென்றலாந் திரு.வி.க.! தமிழவேள் உமையார்!
தனிமொழி செய்கெனத் தந்தையைப் பணித்த
நீலாம் பிகையார்! கோலத் தரங்கர்!
துடைப்புடைக் காவலின் துடிசையங் கிழாரொ(டு)
இற்றைநாள் உள்ள இன்குறள் அழகர்!
செம்பொருட் டுணிவின் சித்தாந்த பண்டிதர்!
நம்பொருட் டெழுந்த,அப் புரட்சிப்பா வேந்தர்!
தமிழே வாழ்வெனத் துறைபோக அலமரும்
தேவர்க்கு நேயராம் பாவாண ரவர்
பேர்கூறி யாற்றும் பெருஞ்சித் திரனார்!
பைந்தமிழ் ஒழுக்கப் ப.சு. மணியம!
நைந்தநூற் புதுக்கும் வ.சுப் பையா!
இனையரைத் தெரியார்! இவர்சொல் அறியார்!
இனையவர் உழைப்பின் இம்மியுந் தேறார்!
இன்னது தமிழர் இகழ்தரு நிலைமையால்,
எங்கும் புகழ்சேர் எந்தமிழ் மொழியும்
தங்கும இனமும் தாய்நா டதுவும்

மங்கா துய்ய மாண்புகள் மீட்டு,
மொழி,யின, நிலவிடு தலைகளும் உடன்பெற
அம்முப் படிமுன் னேற்றமும் உயிர்கொள,
ஒழிவகல் பணிகளில் தாழ்விலா துஞற்றி
அழிவகல் வுறும்படி ஆயிரம் வழிகளில்
தாய்மொழிச் செப்பம் தளரா தோமபிக
கண்டிடும் ஒரேதாள், கவின்செய் 'தென்மொழி !'
விண்டிடின் மெய்ம்மை, இஃதோர் இயக்கம !
விளைத்திடும் பயன்களோ, இன்னரும முயக்கம் !
களைப்புறுந் தமிழரின் குலமனைந் துலகக,
நிலைப்புறச் செய்யும் நீணெடும விளக்கப் !
இதனொளி குன்றிடின் தமிழ்நிலை குன்றும் !
தமிழின்று குன்றிடின், இனிஎக் காலமும
இமிழ்கடல் உலகில்நாம் தலையெழ மாட்டோம் !
திண்ணம் ! உறுதி ! ஐயமில் உரையிது !
என்னவே இக்கால் துன்னருந் துயர்பல
எண்ணவே நடுக்குற, உள்ளகங் குமைந்திட,
தலைவனைப் பிரிநது, தளரும் 'தென்மொழி'
அலைவுகொள் 'சிட்டு'டன், ஆரஞர் உறுவதை.
உடன்வந்து மாற்றற்(கு) உழைத்து வழிகாணல்
கெடலருந் தமிழ்நலங் காப்போர் முதற்கடன் !
முனையொரு நாள்,யாம் மேவுமிந் நோக்கம்
தனையொத் தெழுந்தே, 'அன்பர் குழு'வொன்(று)
அமைய வேண்டி அழைப்பு விடுத்ததை *
நினைய வேண்டுவம், நயந்திப் போதிலே !
நயந்து நினைந்திடின் : பயன்தமிழ்ச் சிட்டுடன்
தென்மொழி முழக்கமும் தொய்ந்துநில் லாது,
தொடர்தல் வேண்டின் : திங்களும் உதவும்
திட்டம் அறிந்திட—துணைநின் றூற்றிட—
எமக்குமடல் இடுமின் ! எமக்குமடல் இடுமின் !
நமதுகுடி உயர நண்ணுமின் ! தாங்குமின் !
எல்லேர் தமிழின் எழிலுடன்
புல்லிப் பொலிமின் ! பசும்பொன் னெனவே !

* 'தென்மொழி' சுவடி-12. ஓலை-5 பக்கம் 14 பார்க்க.

குறிப்பு: 'தென்மொழி'க்கு, இக்கால் (பாவலரையாவின் தனிப் பெருந் தலைமைத் துணையும் அகன்ற நிலையில்), இடுப் பொடிந்து, நடையொடுங்கி, வீழ்வு அடையுமாறு, வெள்ளமெனப் பொங்கி வருகின்ற பொருள் நெருக்கங் களை, தளர்த்தி (ஐயா வெளிவருந் துணையும்) உதவ விழையும், உதவ வேண்டிய, நெடுஞ்சுமை தாங்கிகளான

தென்மொழி நன்றியாளர்களை, எம்முடன் பின்வரும் முகவரியில் உடனே தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம் :

தென் மறை. நித்தலின்பன்,
கூட்டுநர்—'தென்மொழி' அன்பர் குழு,
39, தெரு 11, தாட்டாபாது, கோவை-641 012.

மணமக்கள் வாழ்க !

தென்மொழி அன்பர் திரு கோ. நக்கீரன், அறி. இ.. கல், இ. அவர்கட்கும், புலவர் வ. இலக்குமிக்கு, தி பி. 2007, ஆடவைத் திங்கள் 19-ஆம் பக்கல், [2-7-76]-இல் இனிது நடந்தது. அதன் நினைவாக தென்மொழிக்கு அன்பளிப்பாக உரு. 25 கொடுத்துள்ளார். தென்மொழி மணமக்களை மனமார வாழ்த்துகிறது.

—அமைச்சர்-தென்மொழி.

— o —

தென்மொழி அன்பர் புலவர். வீ. மீனாட்சிசுந்தரம் அவர்கட்கும் திலகவதிக்கும், தி. பி. 2007 விடைத் திங்கள், 25-ஆம் பக்கல் (7-6-76) அன்று, கோவையில் இனிது நடந்தேறியது. அந்நினைவாகத் தென்மொழிக்கு உரு. 15 அன்பளிப்பாக விடுத்துள்ளார். மணமக்களின் தமிழ் பற்றினை புகழ்ந்து இன்புற்று வாழ தென்மொழி வாழ்த்துகிறது,

—அமைச்சர்-தென்மொழி.

(அட்டை 2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பால்மணக்கும் நாவுடைய பைம்பொன்னே! பாவியமே!
வேல்விழியே! பூம்பொழிலே! விழிமூடி நீயுறங்கு!

செவ்வல்லிப் நீங்கொத்தே! சிமிழ்மூக்கு கொண்டவளே!
ஒவ்வரிய நற்பதுமை ஓவியமே! கண்ணுறங்கு!

தமிழத்துப் பெருங்குடியின் தனிச்சிறப்பில் உளங்கோத்தே
அமிழுகின்ற நங்குடியை ஆர்த்துயர்த்தும் தனித்தமிழ

அப்பனடி உன்னப்பன்! அப்பெரியோன் மகனேநீ
இப்பொழுது இமைமூடி இன்புடனே கண்ணுறங்கு!

இப்பொழுது கடலடியே இன்னுறக்கம் கொள்ளுகின்ற
செப்பரிய வளமார்ந்த செழுங்குமரிக் கண்டமதில்

ஒப்பரிய நற்குலத்து ஒண்டமிழ உன்முன்னோர்
எப்புடையும் புகழ்சூழ எழிற்பண்பில் தலைசிறந்து

நாகரிக உச்சிமிசை நடைநடந்து தடைகடந்து
வேகமுடை வியன்ஞால விரிபரப்பில் அறிவுதிர்த்தி

யாதும்நம தூரென்றும் யாவருநங் கேளிரென்றும்
கோதுமனம் பட்டொழியக் கோல்நாட்டி மேலுயர்ந்தார்

அன்பெழுந்து அறிவுயர்ந்து அகமுழுதும் மேக்கெழுந்து
தென்றிசையின் தென்றலிலே தோய்ந்ததிந்த மண்டிலமே!

'மாந்தரெலாம் ஓரினத்தார் மாண்புறுக!' என்றிருந்த
தேந்தமிழ மாந்தரிடை "தீர்க்க!பசி மாய்க்க!"என

நச்சிவந்த உச்சிகளாம் நச்சுவுளத் தீமாந்த
எச்சிலிலை நக்கினத்தார் எய்த்தனரே நங்குடியை!

இங்குவந்து சோறுண்டு இட்டநம்மின் இனத்தாருள்
கங்குல்பகல் உள்மூட்டிக் காலமெல்லாம் வேறுறுத்தி

மேலைமர்ந்து கொண்டனரே! மேலிருந்து கீழிறங்கிக்
காலமுக்கி வாழ்ந்திருக்கக் காலமுரு வாக்கினரே!

அன்றிருந்து இன்றுவரை அந்நிலையை மேற்சுமந்து
"கன்றுகாலி யோட்டிகளின் காலடியில் நாம்பிறந்தோம்:'

என்றுநமக் குள்பேசி இழிந்தனரே நந்தமிழர்!
என்றுநமக் கோர்விடிவே என்றென்னுளம் ஏக்குறுதல்

தீர்க்கவெனப் பிறந்தவளே! தீக்கதையைக் கேட்டவளே!
ஆர்க்குமுர சோச்சிவந்த அருந்தமிழ நங்குடியோர்

உறங்குகின்றார் சாவுறக்கம்! உனக்குரைப்பேன் என்கண்ணே!
புறமுதகு அன்னாரிட போர்தொடங்க மூலக்கரு

நீயெனவே முற்கருதி! நீள்வினைக்கு முன்னேய்வாய்
சேயெழிலே நல்லுறக்கம் சேர்த்தெடுத்துக் கண்ணுறங்கு!

மண்ணில்தமிழ் மாந்தரெலாம் மலர்ச்சியுற நீயுறங்கு!
கண்ணுறங்கு! கண்ணுறங்கு! காந்தக்கண்ணே கண்ணுறங்கு!

ஆரிரரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ!
ஆரிரரோ ஆரிரரோ! ஆராரோ! ஆரிரரோ!

என்றோ ஒருநாள் ஏந்தலும் வருவான்;
அன்றிலை மணப்பான்; அணைப்பான்;—என்றே
ஏங்கிட நாட்களை எண்ணினாள்!
எண்ணிக் கொண்டிருந்த ஐயையின்
வாழ்க்கை நிலையென்ன?

விரைவில் தொடருகிறது. 2-ஆம் பகுதி.

சிறையில் பிறந்த 'ஐயை'
சிறையிலேயே மீண்டும் வளருகிறாள்.
விடுதலையானவுடன் வெளிவருவாள்.

ஐயையின் மீட்சி!

— மறைமலையடியுறை —

(சிறையில் தோற்றம்பெற்று, உறையும் அவலத் துயரோடு மறைந்து நின்ற "ஐயை", மீட்டும் நாம் காண அச் சிறையகத்தினின்றே வரவுள்ளாள் என்னுஞ் செய்தி கேட்டு மலர்ந்த உள்ளத் துணர்வுகளைப் பாடியது).

வருவாளோ? வருவாளோ? — ஐயை?!
வந்தாளே! வந்தாளே! — என்ன,
நொந்தாளின் நோவும் தொலைமோ?

காண்பாளோ? காண்பாளோ? —மீட்சி?!
கண்டாளே! கண்டாளே! — என்னக்,
கொண்டாடுங் கோலம் நிகழ்மோ?

வரைவாளோ? வரைவாளோ? — ஆண்டு?!
வரைந்தாளே! வரைந்தாளே! — என்ன,
நிறைவாழ்வின் நீளம் திகழ்மோ?

நிறைவாளோ? நிறைவாளோ? — பூத்து?!
சிறைவானில், *சிறைகாண — நாமும்,
உறைவாளின் ஆகம் அலர்மோ?

* *(சிறை காண —பக்கத்திற் காண)*

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.